இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2022. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 146 | இதழ் : 03 | திகதி : 20.02.2022 | விலை : 30.00

## ஈஸ்டர் ஞாயிறு படுகொலை

### ஆணைக்குழுவினது அறிக்கைகள் பற்றித் தமது முடிவுகளைக் கத்தோலிக்க திருஅவை வெளியிட்டது.



கத்தோலிக்க ஆயர் மன்றம் 2019ம் ஆண்டில் இடம்பெற்ற ஈஸ்டர் படுகொலை பற்றிய முழு மையான அறிக்கையை இம்மாதம் 19ம் திகதி சனிக்கிழமை வெளியிட்டுள்ளது.

**'தித்த' (முற்றுப்புள்ளி)** என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட இவ் அறிக்கை ஒரே நேரத்தில் பல இடங்களிலும் திட்டமிட்டு நடாத்தப்பட்ட படுகொலை பற்றிய ஆணைக் குழுவின் அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து எடுக்கப்பட்ட முடிவாக அமைகின்றது.

இவ் அறிக்கையானது இலங்கைக் கத்தோலிக்க ஆயர் மன்றத்தின் தலை வராகிய பேரருட்கலாநிதி வின்ஸ்ரன் பெர்னாந்து ஆண்டகை அவர்களால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் காலை 8.30 மணியளவில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## சிறப்புற இடம்பெற்ற மரியாயின் சேனையின் நூற்றாண்டுவிழா





மரியாயின்சேனை நூற்றாண்டு விழா யாழ் மரியன்னை பேராலயத்தில் கடந்த 06ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனை ஆன்மீகக்குரு அருட்திரு ம. றெஜி ராஜேஸ்வரன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நூற்றாண்டு விழா நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குரு முதல் வர் அருட்திரு ப.யோ. ஜெபரட்ணம் அடிகள் தலைமை தாங்கி விழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இவர் தனது மறையுரையில், சேனையின் பாதுகாவலராக முதன் முதல் யோசேப்பு இருக்கி ன்றார் என்று கைநூல் சுட்டிக்காட்டுவதைக் குறிப்பிட்டு, நாம் புனித மரியாளுடன் இணைந்து புனித யோசேப்பின் அடைக்கலத்தை நம்பிக் கையுடன் வேண்டிக்கொள்ள வேண்டுமெனவும் அழைப்பு விடுத்தார். திருப்பலியை தொடர்ந்து மரியாயின் சேனையினருக்கான நூற்றாண்டு விழா ஒன்றுகூடல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரியில் சர்வமத மாநாடு

யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி உயர்திரு சுப்ரமணியம் பரமானந்தம் தலைமையில் சர்வமத மாநாடு ஒன்று கடந்த 18.02.2022 வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெற்றது. நான்கு பிரதான சமயங்களின் மதகுருக்களினால் வெவ்வேறு தலைப்புக்களில் கருத்துரைகள் இம் மாநாட்டின் போது வழங்கப்பட்டது. கிறிஸ்தவ சமயத்தின் சார்பில் யாழ். மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் "இயற்கை ஆன்மீகம்" எனும் தலைப்பில் கருத்துரை வழங்கினார்.

## பணிவிழாவில் நூற்றாண்டு கண்ட அப்போஸ்தலிக்க கார்மேல் சபை







இலங்கையின் பல பாகங்களிலும் பணியாற்றி வரும் அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையினர் இலங்கையில் தமது பணியை ஆரம்பித்ததன் நூற்றாண்டு விழாவைக் கடந்த 05ஆம் திகதி சனிக் கிழமை யாழ்ப்பாணத்தில் கொண்டாடினர்.

யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் ஆலயத்தில் நடைபெற்ற இந் நூற்றாண்டு விழா நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை நூற்றாண்டு விழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து நூற்றாண்டு விழா சிறப்பு நிகழ்வுகள் யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

## கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையில் சமாதான நல்லிணக்கத்திற்கான மாநாடு





யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் அனுசரணையில் சமாதான நல்லிணக்கத்தை இலங்கையில் எப்படி முன்னெடுப்பது எனும் கருப் பொருளில் இருநாள் மாநாடு கடந்த ஜனவரி 31ம், பெப்ரவரி 01ம் திகதிகளில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்றது.

கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ச. இயூஜின் பிரான்சிஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும், கொழும்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி மக்ஸ்வெல் சில்வா ஆண்டகையும் கரித்தாஸ் தேசிய நிலைய இயக்குநர் அருட்தந்தை மகேந்திர குணதிலக அடிகளும், மேலதிக யாழ். அரச அதிபரும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் கிறிஸ்தவ மதத் தலைவர்களும், சமூகத் தலைவர்களும் இணைந்து பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களை மேற்கொண்டு பல சிறப்பான தீர்மா னங்களை முன்வைத்தனர்.

இம் மாநாட்டின் அமர்வுகளின் வளவாளர்களாக அருட்பணி யூட் சுதர்சன், றூக்கி பெர்னான்டோ ஆகியோரும் செயற்பட்டனர்.

## இளவாலை திருப்பாலர்களின் பாசறை



திருப்பாலர் சபை தினத்தை முன்னிட்டு இளவாலை புனித யாகப்பர் ஆலய திருப்பாலர் சபையினருக்கான ஒன்று கூடலும், பாசறை நிகழ்வும் கடந்த 04.02.2022 வெள்ளிக்கிழமை அன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆரோபணம் ஆண்கள் இல்லத்தில் சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்றது.

பங்குத்தந்தை C. ஜெயக்குமார் அடிகளாரின் வழிகாட்டலில் ஊக்குவிப்பாளர் திருமதி. ம.புஸ்பராணி அவர்களின் ஒழுங்கமைப் பின் கீழ் திரு. ஜோசப்பாலா அவர்களினால் இப்பாசறை நடத் தப்பட்டது. 50 மாணவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றிப் பயனடைந் தனர்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## ICCPR எனப்படும் சர்வதேசச் சமவாயம்

சர்வதேசச் சமவாயத்தில் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமை என்ற உறுப்புரையை நீக்கம் செய்து 2007 ஆம் ஆண்டு சமவாயச் சட்டம் என்ற பெயரில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் 56 ஆம் இலக்கச் சட்டமாக இணைத்த இவ் அரசாங்கம், தற்போது அந்தச் சமவாயச் சட்டத்தைப் பயன்படுத்தி ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை முற்றாகவே நிராகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது போல் உள்ளது.

மைத்திரி ரணில் அரசாங்கம் மேற்கொண்ட புதிய அரசியல் யாப்புக்கான நகல் வரைபில்கூட சமவாயத்தின் உறுப்புரைகள் அனைத்தும் சேர்க்கப்படாதவொரு நிலையில், இலங்கை ஒற்றையாட்சி நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் தற்போது ஆட்சியமைத்துள்ள இவ் அரசாங்கம் உருவாக்கவுள்ள புதிய அரசியல் யாப்பில் சுயநிர்ணய உரிமை மீண்டும் மறுக்கப்படும் அபாயம் தெளிவாகவே தெரிகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேசச் சமவாயம் (International Covenant on Civil and Political Rights- ICCPR) 2007 ஆண்டு 56 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஒற்றையாட்சி அரசின் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்த போதே இந்தச் சமவாயச் சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இலங்கை அரசியலமைப்பில் சேர்க்கப்படாமல் சாதாரண இலங்கைச் சட்டங்களில் ஒன்றாகச் சர்வதேச நாடுகளின் அழுத்தங்களினால் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆறு பகுதிகளாகக் குறைந்தது 37 பக்கங்களைக் கொண்ட ICCPR எனப்படும் இந்தச் சமவாயத்தில் ஒரு நாட்டில் வாழும் அனைத்து மக்களின் சுயநிர்ணய உரிமை (self-determination) அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பிரதான உள்ளடக்கமாகும். ஆனால் பிரதான உள்ளடக்கங்களைத்தவிர்த்து, அதாவது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பகுதிகள் நீக்கம் செய்யப்பட்டு, இலங்கைக்கு ஏற்ற சில பகுதிகள் மாத்திரமே 56ஆம் இலக்கச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட நாடொன்றில் வாழும் மக்களிடையே இனக் குரோதங்கள், மதங்களிடையேயான வெறுப்புகள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் மனிதகுல விரோதங்களைத் தூண்டுதல் போன்ற குற்றங்களுக்குக் கடும் தண்டனை விதிக்கும் உறுப்புரைகள் ICCPR எனப்படும் சமவாயத்தின் பிரிவு 3(1) இல் உள்ளன.

ஆனால் 56ஆம் இலக்கச் சட்டத்தில் ICCPR எனப்படும் சமவாயத்தை ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு பிரிவு 3(1) உள்ளிட்ட சில பகுதிகளை மாத்திரமே இணைத்துள்ளது. உறுப்புரை 1 இல் கூறப்பட்டுள்ள சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற பகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சமவாயத்தை 2007ஆம் ஆண்டு அப்போதைய அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். விவாதம் நடத்தப்படும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் எவரும் சுயநிர்ணய உரிமைக்கான உறுப்புரிமை நீக்கப்பட்டமை தொடர்பாக உரிய முறையில் சுட்டிக்காட்டவேயில்லை.

இலங்கையின் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு ஏற்ற முறையிலேயே ICCPR எனப்படும் சர்வதேசச் சமவாயத்தை இலங்கை அங்கீகரிப்பதாக பிரீஸ் அப்போது துணிவுடன் கூறியிருந்தார்.

ஆனாலும் 2010 ஆம் ஆண்டு முதன் முதலாகப் நாடாளுமன்றத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் தெரிவான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இது குறித்துப் பேசியிருந்தார். சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 1 இல் உள்ளவாறு இலங்கையின் 56 ஆம் இலக்கச் சட்டத்தில் சுயநிர்ணய உரிமை நீக்கம் செய்யப்பட்டிருந்ததைச் சுட்டிக்காட்டிக் கேள்வி எழுப்பியிருந்தார். அதன் பின்னர் அது குறித்த மேலதிக விவாதங்கள் எதனையும் சுமந்திரன் தொடரவில்லை.

2015 ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமைச் சபையில் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தின்போதுகூட ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியாகச் சொல்லவில்லை.

இனக் குரோதங்களைத் தூண்டுதல், மதங்களிடையே வெறுப்புகளை உருவாக்குதல், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைத் தூண்டுதல் போன்றவற்றுடன் இலங்கைத் தேசிய பாதுகாப்புக்கு எதிரான விடயங்களும் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள பிரிவு 14. 2 இல் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன.

இந்த நிலையில் ICCPR எனப்படும் சமவாயத்தின் உறுப்புரை 3(1) இல் கூறப்பட்டுள்ள அதே விடயத்தை 56 இலக்கச் சட்டத்தில் சேர்த்துக்கொண்டமை வேண்டுமென்றே ஈழத்தமிழர்களை சர்வதேசச் சமவாயம் ஒன்றின் மூலமாக அச்சுறுத்தும்செயல் எனவும் இதுவரை சுட்டிக்காட்டப்படவில்லை.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ் மறைமாவட்ட சில அருட்பணியாளர்களின் புதிய இடமாற்ற நியமனங்கள்

யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் யாழ் மறை மாவட்டத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்கள் சிலருக்குப் பணித்தள இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதிய நியமனங்கள் பெறும் அருட்பணியாளர்களின் விபரங்கள் வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| அருட்பணி | S. யூட் கமில்டன் | - | உதவிப்பங்குத்தந்தை | - கிளிநொச்சி |
| அருட்பணி | S. விமலசேகரன் (வசந்தன்) | - | பங்குத்தந்தை | - நெடுந்தீவு |
| அருட்பணி | S. எட்வின் நரேஸ் | - | பங்குத்தந்தை | - புங்குடுதீவு |
| அருட்பணி | S. டியூக் வின்சன் | - | பங்குத்தந்தை | - தாழையடி |
| அருட்பணி | J.B. ஜோதிநாதன் | - | பங்குத்தந்தை | - திருநெல்வேலி |
| அருட்பணி | M.M. லூயிஸ் மொன்பேட் | - | பங்குத்தந்தை | - கோப்பாய் |
| அருட்பணி | X.W. ஜேம்ஸ் | - | இயக்குநர் இளையோர் ஆணைக்குழு | |
| அருட்பணி | A.J.A ஜெயரஞ்சன் | - | இயக்குநர் - ஜோசவ் வாஸ் தமிழ் இறையியல் கல்லூரி | |
| அருட்பணி | J.A. அருள்தாசன் | - | கல்விப்பணி - புனித மடுத்தீனார், புனித சவேரியார் குருமடங்கள் | |

புதிய பணித்தளத்தின் பணிகளை ஏற்றுள்ள அருட்பணியாளர்களின் பணி சிறக்க வாழ்த்துவதுடன், உயர் கல்விக்குச் சென்றுள்ள அருட்பணியாளர்களின் கல்வி சிறக்க பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்களும், செபங்களும்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ். மறைமாவட்டக் குருவும் இளவாலை புனித அன்னாள் ஆலய பங்குத்தந்தையுமாகிய அருட்பணி எறிக் றொஷான் அடிகளாரின் அன்புத் தாயார் **திருமதி. மரியம்மா அரசரத்தினம்** அவர்கள் கடந்த 15.02.2022 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடி நிற்கின்றோம்.

யாழ். மறைமாவட்டக் குருவும் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் நிதியாளராகவும் பணியாற்றும் அருட்பணி எட்வின்நாதன் அடிகளாரின் அன்புத்தாயார் **திருமதி பிலோமினா எட்வேட்ராஜ்** அவர்கள் கடந்த 17.02.2022அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பில் துயருற்றிருக்கும் அருட்தந்தைக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது செபங்களுடன்கூடிய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துநிற்பதுடன் அவரின் ஆன்மா நித்தியத்தில் இளைப்பாற இறைவனிடம் மன்றாடிநிற்கின்றோம்.

## பொதுநிலையினர் கழக பதவிக்கால நிறைவுக் கூட்டம்

யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தின் பதவிக்காலம் நிறைவடைவதால் அதன் இறுதிக்கூட்டம் கடந்த 13.02.2022 அன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மறைக்கல்வி நிலையத்தில் கழகத் தலைவர் திரு. றோமியல் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி P.J.ஜெபரட்ணம் அவர்கள் கலந்து கொண்டு கடந்தகால கழகத்தின் பணிகளுக்காக நன்றி கூறியதோடு, புதிய நிர்வாகத்திடம் மகிழ்வோடு பணிப் பொறுப்புக்களை ஒப்படைக்குமாறும், தற்போதைய நிர்வாக உறுப்பினர்கள் ஒதுங்கி விடாது புதியவர்களுக்குப் பக்கபலமாகவும், பின்புலமாகவும் இருந்து செயற்படுமாறும் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் மறைமாவட்டக் கழக இயக்குநர் J.J.மவுலிஸ் அவர்களும், கிளிநொச்சி மறைக்கோட்டக் கழக இயக்குநர் அருட்பணி செபஜீவன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

## திருத்தந்தையின் “Moto Proprio” அப்போஸ்தலிக்க அறிக்கை

திருப்பீட விசுவாசக் கோட்பாட்டுப் பேராயத்தின் உட்கட்டமைப்பிற்குள் இரு தனிவேறு செயலகங்களை உருவாக்கும் ஆணை ஒன்றைப் பிறப்பித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

திருஅவை வாழ்வில் கடைபிடிக்கப்படும் முக்கிய நோக்கமும் பணியும் ‘விசுவாசத்தைக் காத்துக் கொள்வதில்’ (2திமோ 4:7) என்ற வார்த்தைகளுடன் FIdem Servare என்ற இந்த அப்போஸ்தலிக்க அறிக்கையை தொடங்கியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனித திருத்தந்தை ஆறாம் பவுலால் உருவாக்கப்பட்ட இப்பேராலயத்தின் தற்போதய உட்கட்டமைப்புக் குறித்தும், புனித திருத்தந்தை இரண்டாம் ஜோண்போல் அவர்களால் குறித்துக் காட்டப்பட்ட இதன் தகுதியுடமைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

விசுவாசம் மற்றும் ஒழுக்கநெறி தொடர்புடைய கோட்பாடுகளைப் பாதுகாப்பதும், நற்செய்தி அறிவித்தல் வழி விசுவாசத்தைப் பரப்புவதற்கு உதவும் ஆய்வுகளை ஊக்குவிப்பதும், சமுதாய மற்றும் அறிவியல் வளர்ச்சி யின் முன்னிலையில் வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள உதவுவதும், விசுவாசக் கோட்பாட்டுச் செயலகத்தின் முக்கியப் பணிகளாக இருக்கும் எனக் கூறும் திருத்தந்தை, திருமணம் தொடர்புடைய அலுவலகமும் இந்தச் செயலத்தின் கீழேயே வரும் எனவும் தெரிவித்துள்ளார். இவ்விரு செயலகங்களும் இரு செயலர்களுடன் ஒரே தலைவரின் கீழ் செயற்படும் எனவும் திருத்தந்தை தெரிவித்துள்ளார்



கடந்த 30.01.2022 ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை அடைக்கல அன்னை ஆலய பங்குச் சிறார்கள் தமது திருப்பாலத்துவ சபை தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். இந்நிகழ்வு பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் நடைபெற்றது. ஊக்குவிப்பாளர்களையும் நிகழ்வில் பங்குபற்றிய சிறார்களையும் படத்தில் காணலாம்.




# என் கேள்விக்கென்ன பதில்!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கே: ஒரு மதத்தின் சடங்குமுறைகள், சட்டதிட்டங்கள் போன்றவைகளை மட்டும் கடைப்பிடிப்பதால் ஒருவர் நிறைவுகாண முடியுமா?**

**ப:** அன்ரன், 'சட்டம் மனிதனுக்காக மனிதன் சட்டத்துக்காக அல்ல' என்ற ஆண்டவராம் இயேசுவின் கூற்று மதத்தின் சட்டதிட்டங்களை மட்டும் பின்பற்றுவதால் நிறைவைக் காணமுடியாது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதனையே, "மதம் மனிதனைப் பயமுறுத்தி வைக்குதே தவிர, தன்னம்பிக்கையை வளர்த்திருக்கா? படிச்சவனே அப்படித்தான் இருக்கான் னேன்! கடவுள் இருக்கு, இல்லைங்கிறதைப் பத்தி எனக்கு எந்தக் கவலையும் கிடையாதுன்னேன். நாம செய்யறது நல்ல காரியமாக இருந்தாப் போதும். பக்தனா இருக்கிறதை விட யோக்கியனா இருந்தாப் போதும். அயோக்கியத்தனம் ஆயிரம் பண்ணிகிட்டு கோயிலுக்குக் கும்பாபிசேகம் பண்ணிட்டா சரியாப் போச்சா! " என்ற இந்திய வரலாற்றுத் தலைவர் காமராஜர் அவர்களின் கூற்றும் ஆழ்ந்த சிந்தனைக் குரியது. மேற்சொன்ன கூற்றுக்களை ஒவ்வொரு மனிதனும் இன்றைய சூழலில் தன்னுடைய மத வாழ்க்கைமுறைக்கு ஏற்ப பொருத்திப் பார்க்கவேண்டும்!

*(சசி, யாழ்ப்பாணம்)*
**கே: தம்மை உயர்வாகவும் மற்றவர்களைத் தாழ்வாகவும் வைத்துப் பார்க்கும் மனிதர்களைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**ப:** 'கேளடா மானிடா எம்மில் கீழோர் மேலோர் இல்லை! ஏழைகள் யாரும் இல்லை, செல்வர் ஏறியோர் என்றும் இல்லை! வாழ்வுகள் தாழ்வும் இல்லை, என்றும் மாண்புடன் வாழ்வோமடா!' என்ற மகாகவி பாரதியின் சத்திய வாக்கை இன்னும் அறியாதவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்! மேலும், 'தன்னை உயர்ந்தவன் எனவும் மற்றவன் தாழ்ந்தவன் எனவும் நினைப்பவன் ஒரு மன நோயாளி!' என்ற அறிஞர் அம்பேத்காரின் கூற்றும் தம்மை உயர்ந்தவர்களாகவும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களாகவும் கருதும் மனநிலை உடையவர்களுக்கு அறிவொளி பாய்ச்சும் என நினைக்கின்றேன்!

*(விடலை, மன்னார்)*
**கே: 'தள்ளாத வயது' என வயோதிபர்களைக் குறித்துச் சொல்லப்படுவதேன்?**

**ப:** விடலை, உங்கள் கேள்வி கொஞ்சம் சுவாரசியமானது! தமிழில் சில சொற்றொடர்கள் இருபொருள்பட சிலேடையாகப் பேசப்படுபவை. உதாரணமாக, 'கொங்சலாம்பெண்ணை' என்ற சொற்றொடரை 'கொங்ச லாம்பெண்ணை(ய்)' என்றும் 'கொஞ்சலாம் பெண்ணை' என்றும் சிலேடையாகப் பொருள் கொள்ளலாம். இச்சொற்றொடர்போல 'தள்ளாத' என்பதும் காரணப் பெயராகவே பிறந்திருக்கிறது போல் தெரிகிறது! தள்ளமுடியாத வயதில் இருப்பதால் தள்ளாதவயது என்று வந்தது என நம்புகிறேன்! இப்போது உங்களுக்கு எத்தனை வயதோ தெரியாது! இந்த விடயத்தில் வயதையெல்லாம் குறிப்பிட்டுக் கூறமுடியாது! ஒவ்வொருவருக்கும் அவர்களின் உடல்நிலையைப் பொறுத்து அமையும்! எனினும், அண்ணளவாக ஏறக்குறைய எழுபது வயதினைக் கடந்து எண்பது, தொண்ணூறு வயதில் இருக்கும்போது இச்சொல்லின் பொருளைப் புரிந்துகொள்வீர்கள். உண்மையில் தள்ளமுடியாத (அல்லது தள்ளாத) வயதுதான் என்று! விடயம் புரிகிறதா விடலை!

*(றமேஸ், யாழ்ப்பாணம்)*
**கே: சுற்றுச் சூழலைப்பற்றி என்றுமில்லாத வகையில் கரிசனைகொள்ள வேண்டிய காலகட்டத்தில் இருக்கின்றோம் போல் தெரிகின்றது. சுற்றுச் சூழலுக்கு எதிராகச் செயற்படுபவர்களைக் குறித்து!**

**ப:** றமேஸ், சுற்றுச்சூழலுக்கு எதிராகச் செய்யப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் பாவமாகக் கருதப்படவேண்டும் என்ற கருத்துநிலையைத் திருத்தந்தை பிரான்சிஸ்

**கேள்விகளைக் கேளுங்கள், பதில்களைப் பாருங்கள்!**

2015 இல் வெளியிட்ட 'இறைவா உமக்கே புகழ்!' என்ற தமது சுற்றுமடலில் ஏற்றுக் கொள்வது போன்ற ஒரு நிலைப்பாட்டினை முன்வைக்கின்றார். உலக மக்கள் அனைவருக்கும் 'பொது இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது' பற்றி ஆழமாகச் சிந்திக்க வேண்டிய தீவிர காலகட்டத்தில் இருக்கின்றோம் என்பதைத் திருத்தந்தை இச்சுற்றுமடலில் தெளிவுபடுத்துகின்றார். இப்பூமிப் பந்தில் வாழும் நம் ஒவ்வொருவருக்கும் 'பொது இல்லமாகிய இப்பூமியைப் பாதுகாப்பது' நம் கடமை, நம் பொறுப்பு, நம் அறச்செயல் என்பதை இலேசாக மறந்துபோகக் கூடாது, மறந்துபோகவும் முடியாது!

*(பற்றிக், மன்னார்)*
**கே: ஆன்மீகம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

**ப:** பற்றிக், ஆன்மீகத்தில் முதிர்ச்சி பெற்றவர்களிடம் கேட்கவேண்டிய கேள்வியை ஆன்மீகத்தில் உடும்புபிடிக்க புரண்டு பிரண்டு உருண்டு தவழும் குழந்தை போன்ற என்னிடம் கேட்டிருக்கின்றீர்கள்! ஆன்மீகம் பற்றிப் பலரும் பல அனுபவங்களைப் பகிர்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில், உனக்குள்ளிருக்கும் உண்மையான உன்னைத் தேடிக் கண்டு பிடித்து மகிழ்வாய் வாழ்வதும் ஆன்மீகம் என நம்புகின்றேன்.

**அருட்பணி செ. அன்புராசா**

*(ஆனந்தன், கிளிநொச்சி)*
**கே: நம் நாடாகிய இலங்கை மீண்டெழ வேண்டுமென்றால், நீதி நியாயம் சமத்துவம் நிலைபெற அரசியலில் ஆட்சிமாற்றம் அவசியம் என்று பலரும் பேசத்தொடங்கி விட்டார்கள்! தற்போதைய இலங்கையின் ஒட்டு மொத்த நிலவரங்களையும் பார்க்கும் போது என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**ப:** ஆனந்தன், எதையும் கூறுவதற்கு நான் விரும்பவில்லை! நீங்கள் கேட்டுக் கொண்டதால் கூறுகின்றேன்! கடந்த ஆண்டுகளில் அரசியலில் எத்தனை ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன! என்ன மாற்றம் நடந்தேறி இருக்கின்றது! ஏழைகள் மேலும் மேலும் நசுக்கப்படுகின்றார்கள்! செல்வர்களும் பல்தேசிய நிறுவனங்களும் செல்வச் செழிப்பில் மிதக்கின்றார்கள்! அரசியல்வாதிகள் அவர்களின் அலுவல்களில் (தங்கள் இருக்கைகளைத் தக்கவைப்பதில்) அக்கறையோடு இருக்கின்றார்கள்! நான் நினைக்கின்றேன் நோவா காலத்து நீர்ப்பிரளயம் போன்று ஒன்று நிகழ்ந்தால் புதிய சந்ததி தோன்றும், அனைத்தும் புதிதாய் மாறும்!

# அர்த்தமுள்ள மனித வாழ்வு

**வா**ழ்க்கை ஓர் மரதன் ஓட்டம். நாம் எல்லோரும் அவ்வோட்டத்தில் இணைந்து ஓடிக்கொண்டிருக்கின்றோம். சிலர் சுலபமாக மகிழ்வுடன் ஓடுகின்றனர். சிலர் சவாலை எதிர்த்துப் போராடி ஓடுகின்றனர். சிலர் விழுந்து, எழுந்து பின் ஓடுகின்றனர். சிலர் தோல்வி சுமைகளோடு சோகமாக ஓடுகின்றனர். சிலர் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு வாழவேண்டும் என்பதற்காக ஓடுகின்றனர்.

*கருவறையில் கால் பதித்த மனிதா - உன்*
*காருண்யம் யாதென நீ அறிவாயா?*
*கற்பனைத் திறமைகளால் சுற்றத்தை வென்றுவிடு*
*கடவுள் கையில் உன் கவலைகளை வைத்துவிடு*
*கானல் நீராய் உன் உளக்காயத்தைத் தள்ளிவிடு*
*காட்டாற்று நீர் போல் நீ புறப்படு*
*கனிவுடன் எழுந்து துணிவுடனும்*
*தன்னம்பிக்கையுடனும் நடந்திடு*
*கவலையெல்லாம் மறந்து*
*வாழ்க்கை ஓட்டத்தினில்*
*கதாநாயகனாகிட காவியம்*
*படைத்திட விரைந்திடு*

இயந்திரமயமாகிவிட்ட எமது வாழ்வை இந்த அவசரமான உலகினில் தொலைத்துவிட்ட அமைதியைத் தேடி ஓடிக் கொண்டிருக்கின்றோம். ஓய்வு என்பதற்கு இடமளிக்காது பல விடயங்களில் பரபரப்பாகி செய்து முடிக்க வேண்டும் என்னும் அவாவுடன் பறக்கின்றோம். நிறைவேற்ற முடியாத போது அல்லது தோல்வியடைந்து போகின்ற போது சோர்ந்து போவதுடன் தன்னம்பிக்கையையும் இழக்கின்றோம். இதனால் ஏற்படும் கவலை, மன இறுக்கம், மனப்பாதிப்பு, மன அழுத்தமாக உருவெடுக்கின்றது. இதனைத் தொடர்ந்து பல நோய்கள் எம்மை அணுகத் தொடங்குகிறது. நாம் பதற்றம் ஆகாமல், அமைதியாக இருக்கின்ற ஒவ்வொரு விநாடியும் நம் வாழ்நாளின் ஆயுள் கூடிக்கொண்டிருக்கின்றது.

நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி என்றோ ஒரு நாள் இந்த வாழ்க்கைப் பயணம் ஒரு முடிவுக்கு வரத்தான் போகிறது. நமது வாழ்விற்கு நாமே பல எல்லைக் கோடுகளைப் போட்டுவிட்டு நமக்கு என்ன சொல்லப்பட்டதோ அதுதான் வாழ்க்கை என வாழ்கின்றோம். ஆயினும் நமக்கெனப் பல தெரிவுகள் உள்ளன.

நாம் அமைதி, ஆனந்தம் அற்ற வாழ்க்கையை வாழ்ந்து ஒரு நாள் இறந்து போகலாம். அல்லது இது எனது வாழ்க்கை, இதனைக் கொண்டு நடத்த வேண்டிய பொறுப்பு என்னுடையது என அறிந்து, உள்ளத்தில் பதித்து அவ்வாறு வாழ்வதற்கான முயற்சிகளை எடுக்கலாம்.

பலரிடமும் தமது வாழ்வில் இது எவ்வாறு சாத்தியமாக முடியும் என்ற கேள்வி இருக்கலாம். நாம் மீண்டும் இவ்வாறான விடயங்களைக் கேட்டு, சிந்தித்து அதனை அடையும் வழிகளை, சந்தர்ப்பங்களை ஏற்படுத்த முடியும். இதனால் எமது வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்படும்.

மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் இறைவனின் சிறப்பான படைப்புக்கள். எமது தனித்துவத்துடன் எம்மைப் போல எவரும் இப்புவியில் இருக்கமுடியாது. "எனக்கு நிகர் நானே" என எண்ணிப் பெருமையடைவோம். இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு கணமும் மகிழ்வுடன் வாழப் பழகிக் கொள்வோம். நீங்கள் காணும் ஒவ்வொருவருடனும் புன்னகைக்க மறக்க வேண்டாம். எமது புன்னகைகளுக்காக நாம் எதுவும் செலவு செய்வதில்லை. ஆனால் புன்னகைக்கு பல உறவுகளை உருவாக்கக் கூடிய சக்தியுண்டு. எமது ஒரு கணப் புன்னகை பலவிதமான உள்ளக் குமுறல்களுடன் வாழும் இதயங்களில் ஆறுதலாக விளங்குகிறது.

எமது சிரிப்பினால் ஏற்படும் நன்மைகள்:

- உறவுகளை உற்சாகமாகவும், புதியதாகவும் வைத்திருக்க உதவுகிறது.
- மன அழுத்தத்திலிருந்து விடுபட உதவுகிறது
- கவலைகளிலிருந்து மீண்டெழுந்து நலமுடன் வாழ வழிவகுக்கின்றது.
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது
- இதயம் ஆரோக்கியமாக செயற்பட உதவுகிறது
- உயர் இரத்த அழுத்தம் குறைய உதவுகிறது
- நேரான எண்ணங்களை அதிகரிக்கின்றது.

சிரிப்பு என்பது மனிதனால் மட்டுமே செய்யக் கூடிய செயலாகும். ஏனைய உயிரினங்களுக்கு இந்தப் பண்பு இறைவனால் கொடுக்கப்படவில்லை. எனவே எமது சிரிப்பினால் பிறரை மகிழ்வித்து நாமும் மகிழ்வுடன் வாழுவோம். எமது வாழ்வின் ஒவ்வொரு அசைவுகளுக்கும் அர்த்தம் கொடுத்து எமது வாழ்வைப் பெறுமதியாக்கிடுவோம்.

மனச்சோர்வுகளை அகற்ற மென்மையான இசை உதவுகின்றது. மன அழுத்தத்தைக் குறைக்க நமக்கு விருப்பமான பொழுதுபோக்கில் ஈடுபடுவோம். இனிமையான இசையை நிதமும் சில நிமிடங்கள் கேட்டிடுவோம். எந்த நேரமும் அவசரமான வேலையில் இருப்பதைத் தவிர்த்து, சிறிது நேரம் நமது ஓய்வுக்காக எடுத்துக் கொள்வோம். "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பது பழமொழி. நாம் சுகமாக, சமநிலையாக இருந்தால் தான் எமது கருமங்களை சுறுசுறுப்புடன் செய்வதுடன் பிறருக்கும் உதவி செய்ய முடியும். வாழ்க்கையின் ஆரம்பமும், முடிவும் நமது கையில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதன் இடையிலே வருகின்ற ஒவ்வொரு நாளையும் எவ்வளவு இயலுமோ அவ்வளவு ஆனந்தமாக வாழ்வது நமது கையில் தான் உள்ளது. இப்பூமித்தாயின் மடியிலே பல உள்ளங்களை எம் இதய மெனும் வங்கியில் நித்தமும்



அருட்சகோதரி றோமலா அன்ரனி (HC)

# காவலன் கலசம்

அர்த்தமுள்ள ஆன்மீகம் 08

## பரிந்துரைச் செபம்

பாகம் - 1

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

அடுத்தவருக்காகப் பரிந்துரைக்கவேண்டும் என்பது இறைவன் தந்த இரு கட்டளைகளுக்குள்ளே அடங்கியுள்ளது.

1. இறைவனை அன்பு செய்தல்
2. அயலவரை அன்பு செய்தல்.

இவை இரண்டும் இரு கொடைகளாக, தண்டவாளங்களைப்போல் சமாந்தரமாகச் செல்லவேண்டியவை.

பரிந்துரைத்தல் என்பது ஒருவர் இன்னொருவருக்காக நன்மைத்தனங்களை இறைவனிடம் வேண்டுவது.

இவ்வாறான பரிந்துரை தொடக்க காலத்திலிருந்தே இறைவாக்கினர், நீதித் தலைவர்கள் மற்றும் புனிதர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இலகுவாகக் கூறுவதானால், நாம் முன் வைக்கின்ற வேண்டுதல்கள் அனைத்துப் புனிதர்களாலும் இறைவன்முன் பரிந்துரைகளாக முன் வைக்கப்பட்டு, அவை பெற்றுக்



கொள்ளப்படுவதற்கு ஏராளமானோர் சாட்சியம் கூறுவர். அடிப்படையில் தூய ஆவியாரே பரிந்துரைகளுக்கும் அவற்றின் வெற்றிக்கும் தூண்டுதலாக இருக்கிறார். புதிய ஏற்பாட்டில், தூய ஆவியின் வருகைக்குப்பின் இது ஆழமாக உணரப்படவேண்டியது ஒன்றாகும். இதில் பரிந்துரைப்பவர் இறைவனுக்கும் தாம் பரிந்துரைப்பவருக்கும் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு ஆற்றலோடும் தன்னை அர்ப்பணித்து அன்பு செலுத்துபவராக இருக்க வேண்டும். அப்போதுதான் அது உண்மையான பரிந்துரையாக இருக்கும்.

உண்மையான பரிந்துரை செபத்தைத் தமது வாழ்வாலும் பணியாலும் இயேசுவே நமக்குத் தந்துள்ளார். ஏராளமான இடங்களில் இயேசு பிறருக்கு நன்மை செய்யும்போது, தந்தை இறைவனிடம் பரிந்துபேசுவதை நாம் காண்கின்றோம் :

மாற்கு 6:41 "அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி, அப்பங்களைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறுவதற்காகத் தம் சீடரிடம் கொடுத்தார்."

மாற்கு 7:34 "பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சுவிட்டு, அவரை நோக்கி 'எப்பத்தா' அதாவது 'திறக்கப்படு' என்றார். எனவே, அப்பங்களைப் பலுகப்பண்ணும்போதும் நோயாளிகளைக் குணமாக்கும்போதும் தந்தையிடம் வேண்டுகிறார்.

பரிந்துபேசுதலின் அதி உச்சமாக சிலுவையில் உயிர்விடும் நேரத்திலும் தன்னை வதைத்தவர்களுக்காகத்தந்தையிடம் உருக்கமாக வேண்டினார். இங்கே அவர் கற்றுத்தரும் ஓர் உண்மையை நாம் உணரவேண்டும். பரிந்து பேசுதலுக்கும் இறையன்பிற்கும் அடித்தளமாக அயலவரை அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் தூய ஆவியின்கனிகள்கொடைகளுக்குநம்மைவிட்டுக் கொடுத்து, அவர்களை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் மனோநிலை நமக்குள் வளரவேண்டும். இல்லையென்றால் பரிந்துரை நாம் எதிர்பார்க்கும் தகுதியை அடையாமல் போய்விடும்.

**பழைய ஏற்பாட்டில் பரிந்துரை :**

➢ சோதோம் கொமொறா மக்கள் இறைவனுக்குச் சினமூட்டியபொழுதிலும் ஆபிரகாம் இறைவன் வருவிக்கவிருந்த தண்டனையை உணர்ந்து, இதய சுத்தியோடு தண்டனையை விலக்குமாறு வேண்டிப் பரிந்துரைத்தார். அப்போது அவரது பரிந்துரை இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதை நாம் பார்க்கிறோம். இதில் சோதோம் கொமொறா மக்கள்மீது ஆபிரகாம் கொண்டிருந்த கறைபடியாத அன்பும், இறைவன் இரக்கம் மிகுந்தவர் என்ற அசையாத நம்பிக்கையும் அவரைத் தூண்டுவதை நாம் அவதானிக்கலாம்.

➢ மேலும் இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, இறைவனின் துணையோடு வழிநடத்திச் செல்லும் போது இறைவன் தமக்குச் செய்த அற்புதங்களை மறந்து, சிறு சிறு விடயங்களுக்காக முணுமுணுத்து இறைவன் ஏற்றுக்கொள்ளாத அளவுக்கு அவருக்குச் சினமூட்டினர். போலித் தெய்வங்களைச் செய்து வழிபட்டனர்.

➢ உணவு, நீர் கிடைக்காத நேரங்களில் மோசேக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து இறைவனை நிந்தித்தனர். இவ்வாறு பல நிகழ்வுகள் நடந்தபோதும், மோசே அவர்களுக்காக இறைவனிடம் கண்ணீர்விட்டு அழுது நாட்கணக்காக உண்ணாமல் உறங்காமல் இருந்து, தனது மக்களுக்காக இறைவனிடம் பரிந்துபேசி அவர்களைமீட்பதைநாம்காண்கிறோம்.இங்கு பாவம் செய்த மக்கள் மன்னிக்கப்படவேண்டும் என்ற அன்பு உறுதியும் இறைவன் நம்பினோரைக் கைவிடமாட்டார் என்ற உறுதியான ஆத்ம பலமும் அவரிடம் இருந்ததை நாம் காண்கிறோம். இந்த அதி உன்னதமான மனோநிலையே உண்மையான பரிந்துரையாளரிடம் காணப்படவேண்டிய அடிப்படை அம்சமாகும்.

➢ இறைவனின் குரலொலியை ஏற்காமல் மக்கள் இறைவனின் தண்டனையைப் பெறவிருந்தபோதும் இறைவனுக்கு எதிராகப்பாவம்செய்ததைஉணர்ந்து மனம் வருந்திய தானியேல் உமது நகரமும் உமது திருமலையுமாகிய எருசலேமைவிட்டு உமது சினம் நீங்குவதாக. ஆகையால் எங்கள் கடவுளே! உமது பேரிரக்கத்தை நம்பி எங்கள் மன்றாட்டுக்களை உம் முன் சமர்ப்பிக்கிறோம் என்று அவர் வைத்த பரிந்துரையை தானி யேல் 9:19 ல் காண்கிறோம். "என் தலைவரே! கேளும் என் தலைவரே! மன்னித்தருளும் என் தலைவரே! செவிகொடுத்துச் செயலாற்றும் என் கடவுளே! உம்மை முன்னிட்டுக் காலம் தாழ்த்தாதேயும் ஏனெனில் உமது நகரமும் உம் மக்களும் உமது பெயரையே தாங்கியுள்ளனர்."இவ்வாறு பரிந்துரை செய்தபோது இறைவன் அவருக்குச் செவிசாய்ப்பதைப் பார்க்கிறோம். இங்கும் மக்களின் பாவநிலையை தன்னுடனும் சேர்த்து அவர் வேண்டுதல் செய்யும்போது, தனது வேண்டுதலில் இறைவனின் மன்னிக்கும் அன்பையும் அவரது இரக்கத்தின் செயற்பாட்டையும் உணர்வுபூர்வமாக மனதில் கொண்டிருந்ததையும் நாம் காண்கின்றோம்.

> "அனைவருக்காகவும் மன்றாடுங்கள்
> இறைவனிடம் வேண்டுங்கள்
> பரிந்துபேசுங்கள்
> நன்றி செலுத்துங்கள்"

**புதிய ஏற்பாட்டில் :**

➢ இன்று நமக்கெல்லாம் தாயாக விளங்கும் பரிந்துரையின் அன்னையான தூய மரியாவும் தனது பரிந்துரையால் எத்துணை தீயவர்களையும் நலமாக்கி அற்புதம் புரிவதையும், நேரடிக் காட்சிகள் மூலம் தனது பரிந்துரைகளை வெளிப்படுத்துவதையும் உலகம் முழுவதும் கண்டுகொண்டிருக்கிறது. உலகில் நடைபெறும் அன்னையின் காட்சிகளே இவற்றிற்கு சாட்சி. கானாவூர் திருமணமும் குறையை நிறைவு செய்வதற்காக வேண்டும் அன்னையின் பரிந்துரைக்கு ஒரு முன் உதாரணமாகும். எனவே, அடுத்தவர் அயலவர் பற்றி உள்ளத் தூய்மையான உணர்வோடு அவர்களுக்காக இறைவனிடம் கேட்கப்படுகின்ற நலன் கருதிய வேண்டுதல்களே உண்மையான பரிந்துரை செபங்களாகும்.

(தொடர்ச்சி 10ம் பக்கம்)


## தமிழ்க் கிறிஸ்தவத்தின் இறை அனுபவ வளர்ச்சி

10

நான் குருவாகி ஓர் இறையியலாளராக உருவெடுத்ததன் பின்பு, பெரும்பாலும் ஆசிய நாடுகளின் அடிப்படையிலும், எங்களது சொந்தத் தமிழ் சூழலிலும், எனது இறையியல் சிந்தனைகளை உருவாக்கியிருக்கின்றேன். அவற்றை இங்கே தருகின்றேன்.

- அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல்

### அத்தியாயம் 4



**4.6 அந்நிய மறைபரப்பாளர்களும் தமிழ் கிறிஸ்தவர்களும் தமிழ் மொழிக்கு ஆற்றிய சேவைகள் மதிப்புடையன**

அந்நிய மறைபரப்பாளர்கள் தமிழ் மக்களுக்கும் அவர்களு டைய வாழ்க்கை முறைகள் பண்பாட்டுக்கும் மதிப்பும் கரிசனையும் காட்டினர். அன்றைய கிறிஸ்தவ மறைபரப்பாளரின் பார்வையில், கிறிஸ்தவ மதத்தைப் போதிப்பதும் பரப்புவதுமே ஒரே நோக்கமாக இருந்தது. அதற்கு ஏதுவாகத் தமிழ் மொழியை ஆர்வத்துடன் கற்றனர். இந்த முயற்சியில் ஈடுபட்ட சிலர் தமிழ் மொழியையும், அதில் பொதிந்திருக்கும் இலக்கியங்களையும், கேட்டு மதித்து, அதை இன்னும் மேம்படுத்த பலர் பங்களிப்புச் செய்திருக்கின்றனர்.

இயேசு சபை குரு பெஸ்க்கி, பிற்காலத்தில் வீரமாமுனிவர் என்று அழைக்கப்பட்டவரும் போப் சுவாமிகளும், தமிழ் இலக்கியத்திற்கும் இலக்கணத்துக்கும் பெரும் சேவை செய்தனர்.

அதைத் தொடர்ந்து ஈழத் தமிழ்க் கிறிஸ்தவர்களும், குருக்களும், தமது அன்றைய கிறிஸ்தவ விசுவாசத்திற்குள்ளும் கட்டுப்பாட்டிற்குள்ளும் இருந்து கொண்டு, பல சேவைகளைச் செய்திருக்கின்றனர். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், தாவீது அடிகள், தனிநாயக அடிகள், மரிய சேவியர் அடிகள், தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் பல அரிய சேவைகளைச் செய்திருக்கின்றனர். அதையிட்டு ஈழத் தமிழ் திருஅவை பெருமை கொள்கிறது.

### அத்தியாயம் 5

**2 ஆம் வத்திக்கான் சங்கம்**
**கத்தோலிக்க திருஅவை முழுவதையும்**
**புதுப்பிக்க நடந்த புதிய பெந்தக்கோஸ்து**

**5.1 உயிருள்ள அமைப்புகள் எப்பொழுதும் புதுப்பிக்கப் படவேண்டும்**

திருஅவை, இறை வெளிப்பாட்டிலிருந்து தோன்றிய மனித தெய்வீக அமைப்பு. இது உயிருள்ள அமைப்பு என்பதால் தொடர்ந்து புதுப்பிக்க வேண்டுமென்பதை உரோமைத் தலைமைப் பீடம் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொண்டது. (Church must be always reformed). திருஅவைகள் வெறும் மனித அமைப்புக்களாக இருந்துகொண்டு பொருத்தமான பயனுள்ள விதமாக இறைவனுக்கும் மனிதனுக்கும் உகந்த முறையில் இயங்க முடியாது. மாறாக எல்லா உயிரினங்களையும் போல், திருஅவையும் உயிர் ஊட்டித் தன்னைப் புதுப்பிக்க வேண்டும்.

இதைத் தத்துவமாக ஏற்றிருந்தாலும், நீண்ட பல நூற்றாண்டுகளாக, உலகத்தில் நடந்தேறிய பல மாற்றங்களுக்குப் பொருத்தமாகத் திருஅவையின் அமைப்பில் 4ஆம் நூற்றாண்டிலிருந்து மிக மிகச் சில மாற்றங்களே நடந்துள்ளன. திருஅவைச் சங்கங்கள் ஐரோப்பிய ஆயர்களின் சங்கங்களாகவும், விசுவாசத் தெளிவும் ஒற்றுமையும் இருக்க வேண்டுமென்பதற்காக, விசுவாசக் கோட்பாட்டிலே மாத்திரம் கவனம் செலுத்தி உள்ளன.

ஐரோப்பாவிற்கு வெளியே, 16ஆம் நூற்றாண்டிலிருந்து திருஅவைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், அவைகளின் அந்நிய சூழலையும் தேவைகளையும் பற்றி, உரோமைத் தலைமைப் பீடம் சிந்திக்க, தமிழ்ஆயர்களினாலே தூண்டப் படவுமில்லை, மாற்றங்கள் எதுவும் செய்யப்படவுமில்லை.

அன்றைய உலக மனித சமுதாயத்திலிருந்து, இன்றைய உலக சமுதாயம், பலவிதமான முன்னேற்றமான மாற்றங்களை அடைந்திருக்கின்றது. குறிப்பாக விஞ்ஞான உலகத்திலே ஆச்சரியமான கண்டுபிடிப்புகள், காலனித்துவ காலத்திலே அமெரிக்காவிலும், ஆசியாவிலும், சமுதாய அரசியல் மாற்றங்கள பல நடந்திருக்கின்றன.

ஐரோப்பாவைப் பொறுத்தமட்டில், 1921, 1939இல் இரண்டு உலக மகா யுத்தங்கள் நடைபெற்றதினால், பெரும் அழிவுகளையும் உயிர்ப் பலிகளையும் கொடுத்ததினால், ஐரோப்பியரின் சிந்தனை - கண்ணோட்டப் பார்வையிலும் மாற்றங்கள் (Paradigm shift) ஏற்பட்டன. இப்படியாகப் பூகோள அரசியல், சுகாதார, சமாதான, ஜனநாயக முயற்சிகளிலும், ஐக்கிய நாடுகள் சபை (United Nations UN) உலக சுகாதார அமைப்பு (World Health Organisation WHO) போன்றன தோன்றின.

இரண்டு உலக மகா யுத்தங்களால் அழிவுகளை அடைந்த ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் மத்தியிலும் சில புதுப்பித்தல் இயக்கங்களைப் பிறப்பித்தன. விவிலிய இயக்கம், வழிபாட்டு இயக்கம், ஒற்றுமை இயக்கம் பொது நிலையினர் இயக்கம் (biblical, liturgical, ecumenical, laity movements). இம்மாபெரும் மக்கள் இயக்கங்கள், உரோமையின் தலைமை பீடத்திலும் ஓரளவு தாக்கத்தையும் ஏற்படுத்தியது. இந்நிலையில் தான் 23ஆம் அருளப்பர் 2ஆம் வத். சங்கத்தைத் தொடக்கினார். மேற்கூறிய இயக்கங்களுக்கும் அவைகளின் ஊக்குவிப்பாளராக ஐரோப்பிய திரு அவைகளில் செயற்பட்ட இறையியலாளர்களுக்கும் நல்ல சந்தர்ப்பம் தோன்றியது. சங்கத்தின் உந்து சக்திகளாக இவர்களே செயற்பட்டனர். 2ஆம் வத்திக்கான் சங்கம் முடிந்த பின், இவர்களின் மாற்றங்களுக்கான தாக்கத்திற்கான பங்கை (in-flu-ence) வர்ணித்த ஒரு அமெரிக்கர், ஐரோப்பிய றைன் ஆறு இத்தாலியின் தைபர் ஆற்றுக்குள் பாய்ந்ததென (Rhine flows into Tiber) தமது புத்தகத்தில் அழகாக வர்ணித்தார்.

(தொடரும்....)

# இலங்கைத் திருஅவையில் 175 ஆண்டுகளை நிறைவு செய்யும் அமலமரித் தியாகிகள்

## அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாண முதல்வரிடமிருந்து



பலருக்குப் பலவிதமாக இறையனு பவத்தைக் காண்பிக்கும் தூய ஆவி யானவர் பிரான்சு நாட்டு புறவான்ஸ் நகரின் சின்னப்பிரபு புனித இயூஜின் டி மசனட் மேலும் நிழலிட்டார். மனிதம் வாழ வேண்டும், அதுவும் முழுமை யாக வாழ வேண்டும் குறைவில்லாமல் வாழவேண்டும், மதிப்போடு வாழ வேண்டும், மாண்போடு வாழ வேண் டும். இதன் மூலம் இவ்வுலகிலே புனி தம் பிரதிபலிக்க வேண்டும் என்ற தன்னுடைய உயரிய எண்ணத்தை நிறைவேற்ற இறைவன் புனித இயூஜின் டி மசனட் அவர்களைத் தன் பணிக்கென அழைத்துக் கொண்டார். இவர் தான் உலகெங்கும் பணியாற்றும் அமலமரித் தியாகிகளின் இதயத்துடிப்பு. அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனர்.

சிறுவயதில் அவர் அனு பவித்த துன்ப வடுக்கள், அகதி வாழ்க்கை, அவரை இயேசுவின் சிலுவையின் கண் ணோட்டத்தில் சிந்திக்கத் தூண்டியது. அக்காலத்தில் மக்களின் துன்ப நிலையைக் கண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க, இயேசுவின் நற்செய்தியின் ஒளியில் மக்களை ஒன்றிணைக்கப் புறப்பட்டார். கடவுளுடைய மகிமைக்காகவும், திரு அவையின் நன்மைக்காகவும், ஏழை மக்களின் நல் வாழ்விற்காகவும் தன்னை அர்ப்பணித்த புனித இயூஜின் டி மசனட், தன்னுடன் பயணிக்க கூடிய சில குருக்களையும் இணைத்து அமல மரித்தியாகிகள் சபையை நிறுவினார்.

இறைவனின் அழைப்பில் அவர் கொண்ட ஆழமான நம்பிக்கை யாலும், மரியன்னை மட்டில் அவருக் கிருந்த பற்றுதலாலும் அமலமரித் தியா கிகள் சபை திரு அவையால் அடை யாளங்காணப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட் டது. மிகவும் குறைந்த உறுப்பினர் களைக் கொண்டு தங்கள் பணியை ஆரம்பிக்கத் தொடங்கினாலும், உலக னைத்திற்கும் இயேசுவின் நற்செய் தியை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே இவரது விருதுவாக்கு. இத னால்தான் அன்று இலங்கைத் திரு அவைக்குப் பொறுப்பாக இருந்த ஆயர் பெற்றக்கினி அவர்கள் தன்னுடன் இலங்கையில் பணியாற்ற குருக்களின் உதவியை நாடிய பொழுது, ஆயர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட ஆயர் ஒரு வர் "புனித பவுலுடைய இதயத்தைப் போன்ற இதயமுடையவர்" என்றுபுனித இயூஜினை அடையாளம் காட்டினார்.

தனது பணிக்காலத்தில் இலங்கை முழுவதனையும் பல தடவைகள் கால் நடையாக வலம் வந்து கத்தோலிக்க விசுவாசிகளை ஊக்கப்படுத்தி, இறையன்பில் ஆழப்படுத் திய வாஸ் அடிகளாரின் அற்புதப் பணி இன்று வாழும் எம் எல்லோரையும் மிகவும் சிந்திக்க வைக்கிறது. ஒல் லாந்தரின் ஆணவத்தால் அழிந்து கொண்டிருந்த இலங்கைத் திரு அவைக்குப் புத்துயிர் அளித்த பெருமை புனித யோசவ் வாஸ் அடிகளாரையே சாரும். அவரைத் தொடர்ந்து இலங் கைத் திருஅவையின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவியவர் புனித இயூஜின் டி மசனெட்.

இலங்கைத் திரு அவை மட்டில் அவருக்கு அளவு கடந்த கரிசனையும் அன் பும் இருந்ததை அவர் ஆயர் செமெரியா வுக்கு எழுதிய கடிதங்களில் காணமுடிகி றது. ஈழ மண்ணில் அமலமரித் தியாகி கள் கால் பதித்து 175 வருடங்கள் கடந்து விட்டன. இவர்கள் நற்செய்திப் பணி, சமூகப் பணி, கல்விப் பணி, உருவாக்கப் பணி என தனி மனிதர்களையும், சமூ கங்களையும் கட்டியெழுப்பிய சிற்பிக ளாகத் திகழ்கிறார்கள். அமலமரித் தியாகிகளின் வாழ்வும் பணியும் இயக்கம் பெறுவதற்கு பின்புலமாகவும் அவாகளது இதயத் துடிப்பாகவும் விளங் கியவர் புனித இயூஜின் டி மசனெட் அவர் களே. அவர் எமது மண்ணையும் மக் களையும் மிகவும் அன்பு செய்த ஒரு புனிதராவார்.

1847ம் ஆண்டு அதி வண. பெற்றக்கினி அடிகளார், இன்னும் அதிக ஐரோப்பிய மறை பரப்பாளர்களைத் தேடி, ஐரோப்பாவுக்குச் சென்றார். அங்கு அவர் அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுன ரும், மார்சேல்ஸ் நகர ஆயருமாகிய இயூஜீன் டி மசனெட் ஆண்டகையைச் சந்தித்து, அமலமரித் தியாகிகளின் உத வியைக் கேட்டார். அவருடைய விண் ணப்பத்தை ஏற்றுக்கொண்ட டி மசனெட் ஆண்டகை, தம் சபைக் குருக்களில் நான்கு பேரைக் கொடுத்து, காலப் போக் கில் தாம் இன்னும் உதவி செய்வதாக வாக்களித்தார். அருட் பணி. ஸ்டிவன் செமேரியாவின் தலைமையில் வந்த அமலமரி தியாகிகள் குழுவிலே, அருட்திரு யோசவ் அலெக்சாந்தர் சியா மின், லூயிஸ் மேரி கீற்றிங் அடிகளார் களும், சகோ. கஸ்பார் டி ஸ்ரெபானிசும் அடங்குவர்.

அடுத்த ஆண்டில் (1849) அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு. மூச் செல், லைடியர், லெபெஸ்கோ அடிகளார்கள் அக் குழு வுடன் இணைந்து கொண்டனர். ஆங்கிலேயரின் காலத்தில் முதலில் இலங்கைக்கு வந்த ஒரே சபையைச் சேர்ந்த மறைபரப்பாளர் குழு இதுவே என்பது குறிப்பிடத்தக்கது. அதிகமான ஐரோப்பிய மறைபரப்பாளர்கள் பெற்றக்கினி ஆண்டகையுடன் இலங்கையின் வட பகுதிக்கு வந்து, அங்கு பல்வேறு பணிக- ளில் ஈடுபட்டனர். அருட்பணி. பிராவி, பிறி யோறி, மிலியானி அடிகளார்கள் போன்ற ஒரு சிலரே தென்னிலங்கையில் தங்கி, ஒறொற்றோறியன் குருக்களுடன் பணி யாற்றினர்.

1856ம் ஆண்டில் அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு ஸ்ரீவன் செமேரியா அடிகளார் யாழ்ப் பாண அப்போஸ்தலிக்க விக்கார் அருட்திரு. பெற்றக்கினி ஆண்டகைக்கு இணை உதவி ஆயராக நியமனம் பெற் றார். 1857ம் ஆண்டு இரு ஒறொற்றோறிய அப்போஸ்தலிக்க விக்கார்களும் இறக் கவே, இரு இணை உதவி அப்போஸ் தலிக்க விக்கார்களான அதி வண. யோசவ் பிராவி ஆண்டகையும், ஸ்ரீவன் செமே ரியா ஆண்டகையும் முறையே கொழும்பு, யாழ்ப்பாணம் மறை மாநிலங்களின் விக்கார்களாக நியமிக்கப்பட்டனர்.

1868ம் ஆண்டு செமேரியா ஆண்டகை இறந்தபொழுது, அவரிடமாக அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் பொன்ஜீன் அடிகளார் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க விக்காராக நியமனம் பெற்றார். அவர் இலங்கைக் திரு அவைக்கு ஆற்றிய சிறந்த சேவை யின் நிமித்தம் அவர் 'இலங்கையின் இரண்டாம் அப்போஸ்தலர்" என அழைக்கப்படுகிறார்.

1883ம் ஆண்டு பொன்ஜீன் ஆண்டகை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அப்போஸ்தலிக்க விக்கா ராக மாற்றப்பட்டார். அவருடைய இடமாக அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அதி வண. அன்று மெலிசன் அடிகளார் யாழ்ப்பாண அப்போஸ்தலிக்க விக்காராக நியமனம் பெற்றார். 1886ம் ஆண்டு இலங்கை ஒரு தனித் திருஅவை அமைப் பாக (Hierarchy) நிறுவப்பட்டு, கொழும்பு ஓர் உயர் மறைமாவட்டமாகவும், யாழ்ப் பாணமும், கண்டியும் அதற்குக் கீழ்ப்பட்ட மறைமாவட்டங்களாகவும் நிறுவப் பட்டன. பொன்ஜீன் ஆண்டகை கொழும்பு உயர் மறைமாவட்ட முதல் பேராயராக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து அமலமரித் தியாகி கள் சபையைச் சேர்ந்த அதி வண. அன்று மெலிசன் (1893-1905), அன்ரனி கூடெற் (1905-1929), பீற்றர் மார்க் (1929-1937), யோண் மேரி மஷொன் (1938-1947) என்பவர்கள் கொழும்பு பேராயர்களாகப் பணிபுரிந்தனர். யாழ்ப்பாணத்தில் அமல மரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அன்று மெலிசன் (1883-1893), கென்றி யூலன் (1893-1919), யூல்ஸ் பிறோல்ற் (1919-1923), அல்பிறெட் இயோமர் (1924-1950), எமிலியானுஸ்பிள்ளை (1950-1972) ஆயர்களாகப் பணி செய்த னர். இலங்கைத் திரு அவையின் வளர்ச் சிக்கு குறிப்பாக யாழ் - கொழும்பு மறை மாவட்டங்களின் வளர்ச்சிக்கு அமலமரித் தியாகிகளின் பங்களிப்பு என்ன என் பதற்கு வரலாறு எமக்கு சான்றுபகர்கிறது.

இலங்கையில் பலபாகங்களிலும் அமல மரித் தியாகிகளினால் ஆரம்பிக்கப் பட்ட ஆன்மீகப்பணிகள், கல்விப்பணிகள், இரக்கப்பணிகள் மற்றும் மனித நேயப் பணிகள் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 175 ஆண்டுகளாக இலங்கை மண்ணில் பணியாற்றிவரும் அமலமரித் தியாகி கள் யாழ்ப்பாணம், கொழும்பு என இரு மாகாணங்களாக இயங்கி வருகின்றார் கள். குறிப்பாக எமது யாழ் மாகாண அமலமரித் தியாகிகளின் பணி எல்லை கள் விரிவாக்கப்பட்டு இன்று யாழ் மற் றும் மன்னார் மறைமாட்டங்களில் அதிகளவான பணித்தளங்களையும் மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு, பதுளை, இரத்தினபுரி, காலி போன்ற



இடங்களில் அம் மறைமாவட்ட ஆயர்க ளின் அழைப்பின் பெயரில் பணியாற்றி வருகிறார்கள். எமது யாழ் அமலமரித் தியாகிகள் வெளிநாடுகளிலும் மறைப் பணியாற்றி வருகிறார்கள்.

காலத்தின் தேவையினை நன் குணர்ந்து, நற்செய்தி அறிவிப்பு, பங்குப் பணி, கல்விப்பணி, சிறுவர் உருவாக்கம், இளையோர் வலுவூட்டல், பெண் தலை மைத்துவக் குடும்பங்களுக்கான வாழ் வாதார வழிகாட்டல், உளவளத்துணை, சமாதானமும் நல்லிணக்கமும், நோயா- ளர் சந்திப்பு, சிறைக்கைதிகள் சந்திப்பு, மது, போதைப் பொருள் பாவனையாளர் களுக்கு சிகிச்சை வழங்கல் பணி, உள வள ஆன்மீகப் பணி, ஆழ் மௌனத் தியானங்கள் போன்ற பலதரப்பட்ட மனித நேயப்பணிகளை ஆற்றி இறைமகிமைக் காகவும், திரு அவையின் நன்மைக்காக வும், மக்களின் நல்வாழ்விற்காகவும் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

யாழ் அமலமரித் தியாகிகளா- கிய நாம் நீண்டகாலமாகப் பணியாற்ற எம்மை அனைத்து வழிகளிலும் வழிநடத்திவரும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். மேலும் மறைமாவட்ட ஆயர்களின் வழிகாட்டலும், குருக்கள் துறவியர்களின் ஒத்துழைப்பும், இறை மக்களின் அன்பும் எமது பணிகளை நாம் விரிவாக்க எமக்கு என்றும் ஆதார மாக உள்ளமையை எண்ணி மகிழ்ந்து இறைவனுக்கு நன்றி கூறுவதோடு எம்மோடு என்றும் பயணித்து எமக்கு உதவுமாறு வேண்டி நிற்கின்றேன். எமது யூபிலி ஆண்டில் மகிழ்ந்து இறை வனுக்கு நன்றி கூறும் எமது சபையை யும் அமலமரித் தியாகிகளையும் இறை வன் தொடர்ந்தும் வழிநடத்தி எம்மைத் தமது கருவியாக்கி இம்மணிற்கு எமது பணிகளை இன்னும் விரிவுபடுத்துவார் என்ற நம்பிக்கையாடு தொடர்ந்து பயணிப்போம்.

**அருட்பணி இயூஜின் பெனடிக்ற்,** அ.ம.தி
அமலமரித் தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்

## ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய சேமக்காலை சிற்றாலயத் திறப்பு விழா

கனடா வாழ் மேற்படி ஆலய அங்கத்தவர்களின் பங்களிப்பில் சேமக்காலை யில் புதிதாக அமைக்கப்பெற்ற சிற்றாலயத் திறப்பு விழா கடந்த 19.11.2021 அன்று மாலை 4.45 மணிக்கு இடம்பெற்றது. முதல் நிகழ்வாக பிரதமவிருந்தினரும் எமது மறை மாவட்டக் குருமுதல்வருமான அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளால் மற்றும் தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி எம்.டேவிட் அடிகளார், மண்ணின் மைந்தன் அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ் அடிகளார் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி S.J.Q ஜெயறஞ்சன் அடிகளாரும் புதிதாக அமைக்கப்பட்ட சிற்றாலய வாயி லில் திருப்பலி ஆடையுடன் மாலை அணிவிக்கப்பட்டு, ஆராத்தியோடு வரவேற்கப்பட் டனர்.

யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்களால் புதிய சிற்றாலயம் திறந்து வைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டுத் தொடர்ந்து கூட்டுத் திரப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியின் நிறைவில் குருக்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் இணைந்து சிற்றாலயவளாகத்தினுள் மரக்கன்றுகள் நடப்பட்டு திறப்புவிழா நிகழ்வு நிறைவடைந்தது.

## காவலன் கலசம்

# அன்பியங்கள் தொடரட்டும்



> அன்பியங்கள் எம்மத்தியில் வாழப்படவும், இறைவார்த்தையின் ஒளியில் எம் வாழ்வு வெளிச்சம் பெறவும் அன்பிய வாழ்வு தொடரட்டும். கொறோனா கொள்ளை நோயின் மத்தியிலும், நாட்டின் விலைவாசி, பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் அன்பிய வாழ்விற்கு ஏற்படும் சவால்களை முறியடித்து வாழமுயற்சி செய்வோம்.

அருட்சகோ. த. ராஜ் டிலன்

**அறிமுகம்**

அன்பியங்கள் எம்மத்தியில் வாழப்படவும், இறைவார்த்தையின் ஒளியில் எம் வாழ்வு வெளிச்சம் பெறவும் அன்பிய வாழ்வு தொடரட்டும். கொறோனா கொள்ளை நோயின் மத்தியிலும், நாட்டின் விலைவாசி, பொருளாதார நெருக்கடிகள் மத்தியிலும் அன்பிய வாழ்விற்கு ஏற்படும் சவால்களை முறியடித்து வாழமுயற்சி செய்வோம். அன்பியம் என்பது அன்பினால் இணைந்த சமூகமாக வாழ்வதாகும். அன்பிற்கு சான்றுபகர்ந்து அதைப்பிறருடன் பகிர்ந்து வாழ்வதே அன்பிய வாழ்வாகிறது. இது ஓர் வாழ்க்கைமுறை ஆகும். எனவே இவ்வாறான அன்பிய வாழ்வு எம்மத்தியில் தொடர்ந்தும் வாழப்பட வேண்டும் என்ற நோக்கத்தினை வெளிப்படுத்தும் முகமாக இக்கட்டுரை எழுதப்படுகின்றது.

**அன்பியத்தின் மையம் இறைவார்த்தையே**

“எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பது போல அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவா 17:21) எனும் இயேசுவின் அறை கூவலுக்கிணங்க இயேசுவை மையமாகக் கொண்டு அன்பினால் கட்டப்பட்ட சமூகம் அன்பியமாகிறது. மேலும் கூறுகையில் அன்பு வாழ்வைப் பகிர்ந்துகொள்ள திருச்சபை ஏற்படுத்தியுள்ள உயிரும் உடலும் கொண்ட ஓர் வாழும் குழு அலகாக அன்பியம் காணப்படுகிறது. அன்பே கடவுள் என்றால் அன்பிற்கு ஈடேது சொல் என நாம் தியானித்துப் பாடுவதைப்போல, அன்பே கடவுளாக இருப்பதால் அவரே மையமாகிறார். இறைவனின் வெளிப்பாடாகிய இயேசுக்கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்து தந்தையின் அன்பை உலகிற்கு வெளிப்படுத்தினார். “தொடக்கத்தில் வாக்கு இருந்தது அவ்வாக்குக் கடவுளோடு இருந்தது. அவ்வாக்குக் கடவுளாயும் இருந்தது. வாக்கு எனும் அவரே தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார். அனைத்தும் அவரால் உண்டாயின, உண்டானது எதுவும் அவரால் அன்றி உண்டாகவில்லை” (யோவா 1:1-3). இந்த ‘வாக்கையே’ நாம் எம்மத்தியில் கொண்டு அன்பின் வாழ்வினை வாழ முன்வருகின்றோம். இந்த வார்த்தையின் அடிப்படையில் நாம் வாழ முற்படுகின்ற போது புதுப்பிறப்பு அடைந்தவர்களாக அன்பினால் பிணைக்கப்பட்ட வாழ்வை அடைகின்றோம். “நீங்கள் அழியக்கூடிய வித்தினால் அல்ல மாறாக உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான அழியாவித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள்” (1பேது 1:23). இவ்வாறாக நிலைவாழ்வு தரும் வார்த்தையை மையமாகக்கொண்டு வாழவே அன்பியங்கள் எம்மை அழைக்கின்றன. மரியாவிற்கு மங்களவார்த்தை சொல்லும் போது கூட வானதூதரின் வார்த்தைகள் மரியாவைப் புதுவாழ்விற்கு அழைப்பதை நாம் காணலாம். “நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் ” (லூக்1:38) என்ற வார்த்தைகளை மரியா கூறுவதற்கு அந்த உயிருள்ள வார்த்தையே முதன்மையாகிறது. இயேசுவின் பணிவாழ்விலும் அவரின் வார்த்தைகள் ஏனையோருக்கு அன்பிநிறைந்த புதுவாழ்வினையே கொடுத்தன. எனவே இறை வார்த்தையை மையமாகக்கொண்ட அன்பியங்கள் எம்மைப் புதுவாழ்விற்கு அழைக்கின்றன.

**அன்பியத்தின் பண்புகள்**

அருகிலுள்ள குடும்பங்கள் ஒரே குடும்பமாக ஒருவீட்டில் கூடித் தமது விசுவாசத்தை ஆழப்படுத்துகின்றன. அவர்களுடைய குழுமம் நற்செய்திப்பகிர்வை மையமாகக் கொண்டு இறை பிரசன்னத்தை அனுபவிக்கும் குழுமமாகிறது. தங்களுடைய விசுவாசத்தின் வெளிப்பாடாகிய இறைவார்த்தைப் பகுதியைத் தம் வாழ்வாக மாற்றும் குழுமமாகின்றது. இறுதியில் தங்கள் பங்கு மக்களுடன் இணைந்து ஆலயச்செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்குகொள்ளும் திருச்சபையாக மாறுகின்றது. தமது விசுவாசத்தின் மூலம் ஒரே குழுமமாகக் கட்டியெழுப்பப்பட்டு பிறர் தேவைகளைப் பூர்த்திசெய்யும் குழுமங்களாகின்றனர். இவர்களுடைய தொடர்ச்சியான குழுமவாழ்வு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும், மாற்றத்திற்கும் உதவிபுரிகின்றன. அன்பியக் குழுமங்கள் எமது பண்பாடு, கலாசாரங்களைத் தாங்கிச்செல்லும் ஊடகங்களாகவும் மாற்றம் பெறுகின்றன. இதனால் எமது திருவழிபாடுகள் மென்மேலும் ஆழம்மிக்க வழிபாடுகளாக மாற இக்குழுமங்கள் உதவுகின்றன.

**அன்பியத்திற்கு ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கைமுறை ஓர் சிறந்த உதாரணமாகிறது** (தி.ப 2:42-47)

ஆதிக்கிறிஸ்தவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் உருவாக்கம் பெறுகின்ற திருச்சபையாக இருந்தனர். இதனால் அவர்கள் திருத்தூதர்கள் கற்பித்ததைக் கேட்பதில் ஆர்வமாக இருந்தனர். இறைவனின் வார்த்தைக்கு செவிமடுக்கும் மக்களாக வாழ்ந்தனர். இதனால் அவ்வார்த்தைகளின் படி வாழ முயற்சித்தனர். இவர்கள் அன்பும் நட்பும் கொண்டு ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் திருஅவையாக வளர்ந்தனர். கிறிஸ்துவைத் தலையாகவும், கிறிஸ்தவர்களை அதன் உறுப்புக்களாகவும் கொண்ட ஒரே உடலாக இருந்தனர். கிறிஸ்துவின் பொருட்டு அனைவரையும் சகோதர சகோதரிகளாக மதித்து வாழ்ந்தனர்.

எப்போதும் இறைவேண்டலில் நிலைத்திருந்ததால் தமக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், சோர்வுகள், தடைகள், முரண்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டனர். இவர்கள் தம்மிடமுள்ளதைப் பொது உடைமையாகப் பாவித்ததுடன் பகிர்ந்துவாழும் மனப்பக்குவத்தையும் கொண்டிருந்தனர். தங்களுடைய நிலபுலன்கள், பிற உடைமைகள் அனைத்தையும் பொதுவாக வைத்திருந்தனர். மேலும் பிறருடைய தேவையை உணர்ந்து அதனைப் பூர்தி செய்யும் சமூகமாக விளங்கினர். வீடுகளில் அப்பத்தைப்பிட்டு, உணவைப்பகிர்ந்து உண்டார்கள். இதனால் ஓர் மகிழ்ச்சியும் நிறைவுமுள்ள திருஅவையாகத் திகழ்ந்தனர். இவ்வாறான ஒரு உதாரணம் மிக்க அன்பின் வாழ்வை வாழவே எமது அன்பியங்களும் அழைக்கப்படுகின்றன.

**இறைவார்த்தையின் ஒளியில் அன்பியம் எதிர்பார்க்கும் புதிய வாழ்க்கைமுறை**

**தி.ப 4:32 – நம்பிக்கை கொண்ட மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே நம்பிக்கையும் கொண்டிருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடைமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது.**

**1திமோ 5:1–2 – முதியோரிடம் கடுமையாய் இராதே. அவர்களைத் தந்தையராக மதித்து ஊக்குவி. இளைஞர்களைத் தம்பிகளாகவும் வயது முதிர்ந்த பெண்களை அன்னையராகவும், இளம்பெண்களைத் தூய்மை நிறைந்த மனதோடு தங்கையராகவும் கருதி அறிவுரை கூறு.**

**உரோ 15:1–2 – மனவல்லமை கொண்டவர்களாகிய நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ளக் கடைமைப்பட்டிருக்கிறோம். நமக்கு உகந்ததையே தேடலாகாது. அடுத்தவருடைய நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் செயற்பட்டு அவர்களுக்கு உகந்தவர்களாக வாழுங்கள்.**

**கொலோ 3:14–15 – அன்பையே கொண்டிருங்கள். அதுவே இவையனைத்தையும் பிணைத்து நிறைவு பெறச்செய்யும். கிறிஸ்து அருளும் அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக!** இவ்அமைதிக்கென்றே நீங்கள் ஒரே உடலின் உறுப்புக்களாக இருக்க அழைக்கப்பட்டீர்கள்.

எபிரே 13:1-3 - சகோதர அன்பில் நிலைத்திருங்கள். அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வானதூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டிருப்பதாக எண்ணி எண்ணி அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால், துன்புறுத்தப்படுபவர்களை மறவாதீர்கள்.

**கூட்டொருங்கியக்கம் விடுக்கும் அன்பிய வாழ்க்கை முறை**

நாம் அனைவரும் அறிந்ததைப்போல 2023 ஆம் ஆண்டு வத்திக்கானிலே “கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக” எனும் தொனிப்பொருளில் உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது. அதிலே மூன்று முக்கிய விடயங்கள் எம்மைச் சிந்திக்க அழைக்கின்றன. அவையாவன ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி என்பனவாகும். இவை மூன்றும் அன்பியத்தின் பண்புகளையே இயம்பி நிற்கின்றன.

ஒன்றிப்பு என்பதன் மூலம் மூவொரு கடவுளின் ஒன்றிப்பு எம்மத்தியிலும் காணப்படவேண்டும், இவர்களின் அன்பினால் இணைந்த ஒன்றிப்பு எம்மை ஒன்றிப்பு வாழ்விற்கு அழைக்கின்றது எனும் கருத்து முன்வைக்கப்படுகிறது. எனவே இந்த மூவொருகடவுளின் ஒன்றிப்பில் இணையப்பெற்ற நாம் இறைவார்த்தையை வாசித்து, திருஅவையின் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்து ஒன்றிணைந்த நம்பிக்கையில் அருள் ஊக்கம் பெறவேண்டும்.

பங்கேற்றல் எனும் கருத்தின் மூலம் திருஅவையிலுள்ள திருநிலையினரும் பொதுநிலையினரும் இணைந்து இறையாட்சியில் பயணிக்க வேண்டும் என எடுத்துக் கூறப்படுகின்றது. அங்கு ஒருவர் மற்றவருக்கு செவிமடுத்தல் என்பது முதன்மை பெறுகிறது. எனவே எந்த விதவேறுபாடுகளுமின்றி ஒருவரை ஒருவர் ஏற்று வாழவும், பிறரின் சுதந்திரத்தைப்புரிந்து வாழவும் இம்மாமன்றம் எம்மை அழைக்கின்றது.

பணி எனும் பகுதியில் அனைத்து சமூகங்கள் மத்தியிலும் கடவுளின் அன்பிற்கு சான்றுபகர்வதே ஒருவரின் பணியாக மாற வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ளது ஆதிக்கிறிஸ்தவர்களிடம் காணப்பட்டதைப் போல ஓர் சாட்சிய வாழ்வு வாழ எம்மை அழைத்து நிற்கின்றது. இவ்வாறாக இக்கூட்டொருங்கியக்கம் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றமும் எம்மை ஓர் அன்பிய வாழ்விற்கே அழைத்து நிற்கின்றது. விளிம்புநிலையிலுள்ள அனைவரையும் ஒன்று சேர்க்கவும், அவைரும் சமமாகவும், சகோதரத்துவத்துடனும் அன்பியவாழ்வை வாழவும் அழைக்கப்படுகின்றோம்.

**அன்பியத்தில் ஏற்படும் சவால்களும் தீர்வுகளும்**

**சவால்கள்**

இன்றைய நவீனமயமான காலகட்டத்திலே , அன்பிய வாழ்வை வாழவிளைகின்றபோது பலவித மான சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டியுள்ளது. அன்பியக்குழுமங்களைப் பங்குகளில் ஆரம்பிக்கும்போது அவைசிறப்பாக இயங்குகின்றன ஆனால் சிறிது காலத்தின் பின் அவை வீழ்ச்சியைக் கண்டடைகின்றன. அவற்றிற்குப் பலகாரணங்கள் இருக்கின்றன:

- ஒரு பங்கிலே அன்பியங்களை உருவாக்குவதில் ஆர்வம் கொண்ட பங்குத்தந்தை மாற்றலாகி வேறு இடம் செல்லும் போது அடுத்துவரும் புதிய பங்குத்தந்தை அதைத் தொடர்ந்து நடாத்துவதில் அக்கறை இன்றி செயற்படல்.
- ஊக்குவிப்பாளர்கள் தமது குடும்பப் பிரச்சினையாலோ , தமது தனிப்பட்ட பிரச்சனையாலோ தளர்ந்து போதல்.
- அன்பியக் குழுமங்களில் இணையவோ, பொறுப்புக்களைப் பகிர்ந்து பெறுவதிலோ அங்கத்தவர்கள் தயக்கம் காட்டல்.
- அன்பியக்குழுமங்கள் வெறுமனே ஜெபிக்கும் குழுமங்களாக மாறி இறைவார்த்தையின் ஒளியில் பகிர்தலை வாழ்வாக்க மறந்துவிடல்.
- பங்கிலே காணப்படும் சாதி வேறுபாடுகள். குடும்பங்கள் தனித்து தூர இடங்களில் இருத்தல்.

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

# காவலன் கலசம்

## மாற்றத்தைத் தோற்றுவிக்கும் நாள் இதுவே!

இன்று நல்ல நாள். நாம் எம்மில் மாற்றத்தைக் காண, பசித்தோருக்கு உணவு அளித்து அவர்களை மகிழ்விக்க, வறியோரை இல்லத்திற்கு அழைத்து விருந்தோம்பல் செய்ய, இறைவன் சிறப்பான முறையில் எங்களை அழைக்கின்றார். எல்லோருக்கும் நல்வாழ்வு நல்கும் இறைவன் நாமும் இறைவனின் வாரிசுகளாக நலமுடன் வாழுவதற்கான முறையினைக் கற்றுக் கொடுக்கின்றார். இயல்பானமுறையில் விருந்தோம்பல் செய்வதில் அக்கறையோடு ஈடுபட வேண்டியவர்களாய் உள்ளோம்.

"பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும் உடையற்றோரைக் காணும் பொழுது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்போது உன்ஒளி விடியல் போல் எழும். விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும். உன் நேர்மை உனக்கு முன் செல்லும். ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின் சென்று காக்கும்" *(எசாயா 58:7-8).*


*இன்றே, இப்பொழுதே*
*வாழ்ந்திட முனைவோம்.*
*இதய மாற்றத்தை இனிதே பார்ப்போம்.*
*இழிவானதை இல்லாமல் செய்து*
*பேரின்பம் பெறுவோம்.*
*இறைமொழி பேசித் திருமறை காப்போம். ஏழை*
*மக்கள் ஏற்றம் பெற*
*ஊக்கத்துடன் உதவிடுவோம்.*

## தூய்மை

தூய்மையான உள்ளம்
தீமையைத் தகர்க்கட்டும்!
தாய்சேய் உறவில்
தெரிவதே தூய்மை
மனம்போன போக்கில்போகாது
குணம்நாடி வாழ்வோம்!
தூய்மையான உறவில்
வாய்மையே வலம்வரும்
வளமான வாழ்விற்குத்
துணையாய் தூய்மைவரும்
கள்ளமில்லா உள்ளமதில்
தூய்மையே தெளிவாகும்
உள்ளொன்று வைத்துப்
புறமொன்று பேசாதீர்
ஒழிந்துவரும் நாகத்தைத்
திரைபோட்டு மறைக்காதீர்
உள்ளத்தின் நிறைவையே
உதடு பேசட்டும்!
உண்மையை உணர்ந்தும்
ஊமையாய் இருப்பதேன்?

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் (அமதி)

## காதல் - அன்பு



பெப்ரவரி - 14 உலகளாவிய ரீதியில் காதலர் தினத்தைக் கொண்டாடி மகிழ்ந்தனர். இருபாலர் மத்தியில் மலர்வது மட்டும் காதல் அல்ல. ஏற்ற மிகு இலட்சியத்திற்கும், எழுச்சி மிகு உன்னத வாழ்வுக்கும் யார் தம் வாழ்வைத் தியாகம் செய்கிறார்களோ? அவர்களிடமும் உள்ளது காதல் - அன்பு. காதலிக்க நிறைய காரியங்கள் இருக்கின்றன. மழலைக் குழந்தைகளின் மாசற்ற சிரிப்பைக் காதலிப்போம். பரந்த உலகில் பசுமையைக் காதலிப்போம். சின்னச் சிட்டுக் குருவிகளின் கீதங்களைக் காதலிப்போம். வண்ணமிகு மலர்களை வாஞ்சையோடு காதலிப்போம். காலத்தைக் கடந்த இசையைக் காதலிப்போம். புதிய உலகைப் படைக்கும் எழுத்துக்களைக் காதலிப்போம். நல்லதை உருவாக்கும் நேர்மறை எண்ணங்களைக் காதலிப்போம். நிஜமான அன்பைப் பகிரும் நல்ல நட்பைக் காதலிப்போம். இறை உறவைச் சாற்றிடும் நமது குழுமத்தைக் காதலிப்போம். இறையாட்சியை நிறுவும் விழுமியங்களைக் காதலிப்போம். வாங்க மனிதத்தைக் காதலிப்போம். இனிஒவ்வொரு நாளுமே நமக்கு காதலர் தினமே.

## வென்றது எப்படி? வெல்வது எப்படி?

நம் உலகில் எத்தனையோ உயிரினங்கள் இருக்கின்றன! இந்த உயிரினங்களை எல்லாம் வென்று நிற்பது யார்? எந்த உயிரினம்! மனிதன்! மனிதன்! மனிதன்! சந்தேகம் இல்லை.

இந்த வெற்றி எப்படி வந்தது? ஆறாவது அறிவான பகுத்தறிவு மனிதனுக்கு மட்டும்தான் இருக்கிறது! சரிதான்!

ஆனால் இந்தப் பகுத்தறிவு என்பது என்ன? அது எப்படி நமக்கு வந்தது? யார் கொடுத்தது? விலங்குகளுக்கு அறிவே இல்லையா? இருக்கிறது! தன் சொந்த வாழ்வில் பெற்ற அனுபவ அறிவு அவற்றுக்கு இருக்கிறது!

பெற்றோர் கற்றுத்தந்த பாடம், வாழ்வில் தானே கற்றுக்கொண்ட பாடம் இரண்டுமே விலங்குகளை வழி நடத்துகிறது! அப்படியானால் விலங்குகளைவிட நாம் முன்னேறியது எப்படி? விலங்குகளின் வாழ்வும் அறிவும் தனிநபர் ஓட்டம் போல!

மனிதர்களின் வாழ்வும் அறிவும் வாழையடி வாழையாகத் தொடர் ஓட்டமாகச் சேகரிக்கப்படுகிறது. பல்லாயிரம் தலைமுறைகளாக நாம் பெற்ற அனுபவங்களை எல்லாம் தொகுக்க நம்மால் மட்டும்தான் முடிந்தது! நம் அறிவை வெளிப்படுத்த மொழி பயன்பட்டது! - அந்த அறிவு வாய்வழிப் பாடமாக நெடுநாள் வந்தது ஐநூறு வருடங்களாக நூல் வடிவில் மலிவாக எல்லோருக்கும் கிடைக்கிறது! - அறிவுப் பசியோடு தேடிப்பிடித்துப் படிப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள்! விலங்குகளை மனித இனம் வெற்றிபெறப் பயன்பட்ட கருவி அறிவு.

**நூல்:** மனிதர்களிடையே இன்று மாபெரும் வெற்றிபெறப் பயன்படும் கருவி அறிவு நூல்கள்! விலங்குகளோடு பின்தங்கி நிற்பதும் நம் கையில்! படித்து முன்னேறி வெற்றிபெறுவதும் நம் கையில். நூல்கள் தரும் அறிவே, விலங்குகளிலிருந்து வேறுபடுத்தி நம்மை வெற்றிபெற வைத்தது. நமது இன்றைய சமூகத்தில் நம்மை உயர்த்தக் கூடியது. அதே அறிவும், அதைத் தரும் நூல்களும்தான்.

## தொடரும் 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்தாஸ்

**65. இயேசு எவ்வாறு நம்மை மீட்டார்?**

இயேசு தம் விண்ணகத் தந்தையின் விருப்பத்திற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து வாழ்ந்தார். நம் பாவங்களுக்காகப் பாடுபட்டு, சிலுவையில் இறந்தார். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழுந்தார். இவ்வாறு நமக்கு மீட்பைப் பெற்றுத் தந்தார்.

**66. இயேசு நமக்காக அனுபவித்த முக்கியமான பாடுகள் யாவை?**

1) யூதத் தலைவர்களால் எதிர்க்கப்பட்டார்.
2) கெத்சமனித் தோட்டத்தில் இரத்த வியர்வை சிந்தினார்.
3) யூதாசால் காட்டிக் கொடுக்கப்பட்டார்.
4) கல்தூணில் கட்டப்பட்டு அடிக்கப்பட்டார்.
5) முள்முடி சூட்டப்பட்டார்.
6) சிலுவையில் அறையுண்டு வேதனைப்பட்டு அவலச்சாவுக்கு உள்ளானார்.

**67.சிலுவைச் சாவோடு இயேசுவின் வாழ்வு முடிந்து விட்டதா?**

இல்லை. இயேசு தாம் முன்னுரைத்தவாறு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். உயிர்த்த நாற்பதாம் நாள் விண்ணேற்றம் அடைந்தார். உலக முடிவு வரை எந்நாளும் நம்முடன் இருக்கிறார்.

**68. உயிர்த்த இயேசு விண்ணேற்றம் அடையும் வரை என்ன செய்தார்?**

உயிர்த்த இயேசு தம் சீடர்களுக்குப் பலமுறை தோன்றி, அவர்களை நம்பிக்கையில் உறுதிப்படுத்தி வந்தார்.

**69. இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா என்றால் என்ன?**

இயேசு பாடுபட்டு, இறந்து உயிர்த்ததையே இயேசுக் கிறிஸ்துவின் பாஸ்கா என்கிறோம்.

**70. கிறிஸ்தவருடைய பாஸ்கா என்பது என்ன?**

இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து தந்தையிடம் சென்றது போல, நாமும் பாவத்தை விட்டு, அருள் வாழ்வுக்குக் கடந்து செல்ல வேண்டும். இதுவே கிறிஸ்தவருடைய பாஸ்கா.

**71.இயேசுக் கிறிஸ்து விண்ணகம் சென்ற பத்தாம் நாள் யாரை அனுப்பினார்?**

தூய ஆவியாரை (துணையாளரை) அனுப்பினார்.

**72. இயேசுக் கிறிஸ்து இப்பொழுது எங்கே இருக்கிறார்?**

இறைத்தந்தையுடன்ஒன்றுபட்டு, இயேசுக்கிறிஸ்து உலகம் எங்கும் இருக்கிறார். அருளடையாள முறை யில் சிறப்பாக நற்கருணையில் இருக்கிறார்.

### நம்பிக்கை அறிக்கையின் மூன்றாம் பிரிவு

**73. நம்பிக்கை அறிக்கையின் மூன்றாம் பிரிவு என்ன?**

இவர் தூய ஆவியால் கருவுற்று புனித கன்னிமரியா விடமிருந்து பிறந்தார்.

**74. நம்பிக்கை அறிக்கையின் மூன்றாம் பிரிவு கூறுவது என்ன?**

இம் மூன்றாம் பிரிவானது இறைமகன் புனித ஆவியானவருடைய வல்லமையால் புனித கன்னி மரியாவினுடைய வயிற்றில் எம்மைப்போன்று உடலோடும் ஆன்மாவோடும் உருவாகினார் என்பதைக் குறித்துக் காட்டுகிறது.

**75. இயேசுக்கிறிஸ்துவிற்கு இவ்வுலகில் தந்தை இருக் கின்றாரா?**

இயேசுக்கிறிஸ்துவிற்கு இவ்வுலகில் தந்தை இல்லை. புனித யோசேப்பு இவருடைய பாதுகாவலர் அல்லது வளர்ப்புத்தந்தை ஆவார்.

(தொடரும்...)

## அன்பியங்கள்.....

(.06 ம் பக்கத் தொடர்ச்சி)

அன்பியத்தைப் பற்றிய அடிப்படை அறிவு இறைமக்களுக்கு இல்லாமை. பெண்கள் மாத்திரம் அன்பியத்தில் பங்குபெறல்.

**தீர்வுகள்**

- அன்பியக்குழுமங்கள் வலுவிழந்து வீழ்ச்சியடைந்து போகும் போது விளிப்புணர்வு, கலந்துரையாடல்களை நடாத்துதல்.
- புனிதபவுல்தாம்உருவாக்கிய குழுமங்கள்வலு விழந்து போகும் போது அவர்களை நேரடியாகச் சந்தித்தோ, கடிதங்கள் மூலமோ வலுப்படுத்தியதைப்போல குருக்களோ, அருட்சகோதரர்களோ, அருட்சகோதரிகளோ அடிக்கடி குழுமங்களைச் சந்தித்து ஊக்கப்படுத்தல்.
- அனைவருடன் நட்புடனும் கலந்தாலோசித்தும் செயற்படும் சிறந்த, பொருத்தமான ஊக்குவிப்பாளர்களைத் தெரிவு செய்தல். பங்கிலுள்ள சாதி வேறுபாடுகளை முடியுமான வரை தகர்த்தெறிய முயலவேண்டும்.
- தூர இடங்களில் இருப்பவர்களும் அன்பியத்தில் பங்குகொள்ளக்கூடிய வசதிகளை ஏற்படுத்தல்.
- அன்பியங்களை ஓர் பங்கில் ஆரம்பிக்கும் போது அன்பிய வாழ்வு தொடர்பான சரியான மனப்பதிவினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல்.
- ஆண்கள், பெண்கள், இளையோர்கள், முதியோர்கள், சிறுவர்கள் என வயதெல்லை இன்றி அன்பியத்தில் பங்குபெற ஊக்குவித்தல்.

**முடிவுரை**

அன்பியங்கள் எமது சமூகத்திலே வாழப்பட வேண்டிய ஓர் சிறந்த அம்சமாகிறது. எம்மிடையே காணப்படும் வேறுபாடுகளை அகற்றி அனைவரும் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஒரேகுடும்பமாக மாறமுயல வேண்டும். அன்பியங்கள் வெறுமனே ஜெபக் கூடமாக நின்றுவிடாது தீர்மானங்களை செயற்படுத்தும் போது அது உயிரூட்டமுள்ள குழுமமாகிறது. இதனால் தேவைகளில் உழல்வோருக்கு ஆறுதல் அளிக்கிறது. மத்தேயு 25:31-40 மக்கள் இனத்தார் அனைவர்க்கும் தீர்ப்பு எனும் பகுதியிலே இறுதிநாளில் ஆண்டவர் கூறும் வார்த்தைகளான "நான் பசியாய் இருந்தேன் நீங்கள் உணவு கொடுத்தீர்கள், தாகமாய் இருந்தேன் என் தாகத்தைத் தணித்தீர்கள் அன்னியனாக இருந்தேன் என்னை ஏற்றுக்கொண்டீர்கள், நான் ஆடையின்றி இருந்தேன் நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள், நோயுற்றிருந்தேன் என்னைக் கவனித்துக்கொண்டீர்கள், சிறையிலிருந்தேன் என்னைத்தேடி வந்தீர்கள் என்பவற்றிற்கு எம்மை ஆயத்தம் செய்ய அன்பிய வாழ்வு ஓர் ஊடகமாக மாறட்டும். எனவே தொடர்ந்தும் அன்பிய வாழ்வு தொடர உழைப்போம், கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ்வோம்.



# வரலாற்றில் ஒரு தலைவர்

## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

**யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.**

(சென்றவாரத் தொடர்ச்சி...)

### காலத்தின் பணியாளர், மதிநுட்ப ஆலோசனையாளர்

ஆயினும் ஐந்து பாடசாலைகளைத் தொடர்ந்தும் அரசின் உதவியின்றி, 'வெள்ளை யானையைக் கட்டித் தீனி போடுவது போல்' என்னும் பல்வேறு விமர்சனங்கள், சிரமங்கள் மத்தியிலும் நடாத்தினார். (கட்டுரைத் தொடரில் விரி-வாகக் காண்போம்).

ஐரோப்பிய மறையறிவிப்பாளர் காலத்தில் இருந்து வளர்ந்து வந்த நோவினைப் போட்டிகள், பொதுநிலையினரின் ஆதிக்கங்கள், இனமுரண்பாட்டுச் சண்டைகள், திருவிழாக் கேளிக்கைகள், வீண் ஆடம்பரக் களியாட்டங்கள், குருட்டுப்பக்திகள், செய்வினை, சூனிய, சாத்திர செயற்பாடுகள் போன்றவற்றால் விளைந்த தீமைகளில் இருந்து திருஅவையைப் புனரமைத்துப் புதுப்பித்துப் பகிரும் திருஅவையாக மாற்ற முயன்றார். திருவழிபாட்டுத் தமிழிசைப் பாடல்களின் அறிமுகமும் அர்த்தமுள்ள வகையில் வழிபடவைத்தமையும், இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே இவர் அமுல்படுத்த முயன்ற செயற்பாடுகளாகும். பாடசாலைகள் பறிபோன நிலையில் பங்குகளில் கத்தோலிக்க சூழலைப்பாதுகாக்க பங்கு மறைக்கல்விக்காக இல்லறத் தொண்டர்கள் அமைப்பை ஏற்படுத்தி, நிரந்தர மறைப்போதகர்களை உருவாக்கி பொதுநிலைத் திருத்தூதுச் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தினார். ஏனைய மதங்களுடன் உரையாடல், பிரிந்துபோன பிரதான சபைகளுடன் ஒன்றிப்பு என்பவற்றை ஏற்படுத்தாமல் எதிர்காலத் திருஅவை மண்ணில் நிலைக்காது என்பதை அறிந்திருந்தார். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்பே இதை உணர்ந்து அவற்றின் தலைவர்களுடன் உறவுகளைப் பேணு-வதில் இவர் ஈடுபட்டார். (கட்டுரைத் தொடரில் விரிவாகக் காண்போம்).

பொதுநிலையினரின் உருவாக்கத்திற்கு மேலாகக் காலத்திற்கேற்ற வேறொரு ஆணித்தரமான இவரது முயற்சி மிகவும் கூடிய தொகையில் மறைமாவட்ட அருட்பணியாளர்களை உருவாக்கியதாகும். தானே அ.ம.தி. ஆயராக இருந்து கொண்டு உரோம் தனக்களித்த ஆணையின்படி மறைமாவட்ட அருட்பணியாளர்களைப் பல்வேறு எதிர்ப்புக்கள் மத்தியில், வகையிலும், தொகையிலும் உருவாக்கினார். சுதேசமயமாக்கலைச் செயற்படுத்த மறைமாவட்டச் சொந்தக்குருகுலமே அவசியமென்று இவர் அறிந்திருந்தார்.

சங்கத்திற்கு முன்பே தூரநேக்குடன் இவர் செயற்பட்டமை பல்வேறு விமர்சனங்களையும் தோற்றுவித்ததாயினும் அஞ்சவில்லை. சாதுரியத்துடன் இவர் அவற்றைச் செயற்படுத்தியமையின் பலனை நாம் இன்று அனுபவிக்கின்றோம். இச்சிக்கல் நிறைந்த கைமாறுங்காலத்தில் கொழும்பில் ஐந்தாவது பேராயராக 1947 இல் பணியேற்றிருந்த இவரது வகுப்புத் தோழன் பெஞ்யமின் தோமஸ் கூறே அ.ம.தி.யுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கைப் பேராயருக்கும், ஆயர் மன்றத்திற்கும் அதேவேளை ஆளுனர், பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்ற அரசியல் தலைவர்களுக்கும், சாதாரணமான மக்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டிய நிலையிலும், அதற்குரிய மதிநுட்பம், விவேகம், தூரநோக்கு உடையவராகவும் விளங்கினார். ஏனெனில் இவரே அவ்வேளை ஆயர் மன்றத்தில் இருந்த ஏனைய ஆயர்களை விட நாட்டினதும் திருஅவையினதும் அனைத்து உயர்மட்டங்களிலும் இருந்த பலரிடம் செல்வாக்கும் மதிப்பும் உடையவராக இருந்தார். ஏனெனில் ஏற்கெனவே இவரது கல்லூரி மற்றும் பல்கலைக் கழக வாழ்க்கை தேசிய மட்டத்தில் இவருக்குப் பல சிங்கள, தமிழ் நண்பர்களைச் சம்பாதித்துக் கொடுத்திருந்தது. இவர்களில் பலர் தற்போது நாட்டின் சுதேச அரசியல் தலைவர்களாகவும் இருந்தனர். இந்த நண்பர்கள் பெரும்பாலும் இவருக்குத் தேவையானவர்களாக இருந்ததோடு மட்டுமல்லாது, எச்சந்தர்ப்பத்திலும் இவருடனான உறவைத் துண்டித்து விடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

அதேவேளையில் இவரும் தன்னோடு தொடர்பு கொள்பவர்களுக்கு சிறந்த ஆலோசனையாளராக மட்டுமன்றிப் பல உயர்மட்ட உதவியாளராகவும் விளங்கினார். இப்பரஸ்பர உறவானது இவரது தேசிய ரீதியிலான உயர்மட்ட உறவிற்கும் வழிவகுத்தது. இக்கட்டான இக்காலப்பகுதியில் இவர் அடிக்கடி கொழும்பில் நிற்க வேண்டியிருந்தது. "எமிலைக் காணாவிட்டால் கூறேக்குச் செமிக்காது" என்று பல அருட்பணியாளர்களும் ஏனைய ஆயர்களும் நகைச் சுவையாகக் கதைக்கும் அளவிற்கு இவர் இன்றியமையாதவராக இருந்தார். இதனால் இவரது விமான, தரைப் பயணங்களும், இவரது வாகனங்களும் யாழ்ப்பாண மக்களின் விமர்சனங்களுக்குள்ளாகின. சிலர் நேர்விதியாகவும் இதன் நன்மைகளைப் புரிந்து கொண்டனர்.

### தூர நோக்கு, நுண்மதி

இவரைப் பலர் ஒரு இராஜதந்திரி, அல்லது ஒரு காரியவாதி என்று கூறினாலும் ஆயரை அறிந்தவர்கள் பலர் இவரது தூரநோக்கையும் நுண்மதியையும் எப்போதும் பாராட்டினர். இரண்டாம் வத்திக்கான் சங்கம் புதுப்பித்தல் தொடர்பான பரிந்துரைகளை 1965இல் வெளியிட முன்பு மறைமாவட்டத்தில் அவைகளைச் செயற்படுத்தத் தொடங்கியதைக் கூறலாம். அடுத்ததாக அன்றைய அரசு எவ்வித நட்டஈடுகளுமின்றிப் பாடசாலைகளைத் தேசியமயமாக்கப் போவதை எவ்வாறும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை உணர்ந்ததோடு, இக்கையாலாகாத் தன்மையிலுங்கூடத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்க வாழ்வின் அடிப்படை என்பதை உலகிற்குப் பறைசாற்றப் பாடசாலைகள் பாதுகாப்புப் போராட்டத்தை 1960 செப்ரெம்பர் முதல் தொடங்கி 1961.01.23 இல் அரசுடமையாக்கப்படும் வரை தீவிரப்படுத்தி இவர் முன்னெடுத்தமையாகும். அடுத்ததாக நாடெங்கும் நிகழ்ந்த இந்தப் பாடசாலைகள் பறிபோனமை, திருஅவைக்குப் புதிய பாதையைத் திறந்ததால் பங்கு மறைக்கல்வியைத் தொடங்கி நடாத்தப் பெற்றோருக்கும் பொதுநிலையினருக்கும் விழிப்புணர்வையூட்டி இல்லறத் தொண்டர்கள் நிரந்தர மறைப்போதகர்கள் மற்றும் தன்னார்வ மறையாசிரியர்களை உருவாக்க உறுதி கொண்டார். தூரநோக்கிற்கு அடுத்ததோர் எடுத்துக்காட்டாக மறைமாவட்டத்தில் பணியாற்ற சொந்தக் குருகுலத்தை உருவாக்கியும், ஒன்றிப்பு உடையாடல்களை முன்னெடுத்தமையுமாகும். நுண்மதி என்னும் போது, ஆளுநர் திரு. வில்லியம் கோபல்லாவ முதல் சாதாரண பொது மக்கள்வரை இவரிடம் தீர்வு பெறுமளவிற்கு நுண்மதியுடையவராக இருந்தமைக்குப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். ஒரு பங்கில் இருந்து தமது பங்குத் தந்தையை மாற்ற வேண்டாம் என்ற விண்ணப்பத்துடன் ஒரு தூதுக்குழு இவரிடம் சென்று பங்குத் தந்தை செய்து வருகின்ற பணிகளின் நன்மைத்தனங்களை எடுத்துச் சொன்னார்கள். இவரும் ஆறுதலாக அமைதியாகச் செவிமடுத்துவிட்டுச் "சரி சென்ற ஞாயிறு உங்கடை சுவாமி என்ன பிரசங்கம் சொன்னவர்?" என்று கேட்டார். வந்தவர்கள் மௌனமாயினர். தொடர்ந்து "உங்களுடைய பங்கிலை நன்றாகப் பணி செய்கிற சுவாமி, வேறு பங்கிலை உள்ளவர்களுக்கும் தேவைதானே? அவர்களும் அவருடைய நல்ல சேவைகளைப் பெறத்தானே வேணும். அவர்களும் முன்னேறுவது உங்களுக்கு விருப்பம் தானே? நான் உங்களுக்கு எப்போதும் நல்லசுவாமியைத்தானே அனுப்புறனான். நல்ல சுவாமியை அனுப்புறன், சந்தோஷமாகப் போயிற்று வாங்கோ, என்ன பிள்ளையள்" என்று மதிநுட்பத்துடன் கூறி அனுப்பிவைத்தார். அவர்களும் "ஆண்டவரே நீங்கள் சொல்லுறதும் சரிதான் என்று கூறி மறுப்பின்றிச் சென்றனர்". அவ்வேளை ஆயர் தன்னுடன் சி.இ.நீ. குணசீலன் அடிகளை இச்சந்திப்பிற்கு

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

அழைத்துச் சென்றிருந்தார். தன்னை அணுகியவர் அனைத்தையும் சொல்லும் வரை பொறுமையோடு செவிமடுப்பார். இதுவே பாதிச் சிக்கல்களைத் தீர்த்துவிடும். பின்னர் இலகுவாகத் தீர்வைக் கொடுப்பார். இவருடைய தொடர்பில் இருக்கும் அனை-வரையும் இன, மத,மொழி பேதமின்றி அவரவர் வரலாற்றுப் பின்னணியுடன் ஆழமாக அறிந்திருந்தார். யாராவது புதிய-வர் தன்னிடம் வந்துவிட்டால் மறுமுறை அவரை சந்திக்கும் போது அவரது பின்னணி, சுகநலன்களைச் சொல்லி உரையாடும் அளவிற்கு ஞாபகசக்தி கொண்டிருந்தார். திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல "ஆடுகளின் மணத்தை" அறிந்திருந்தார். ஓர் ஆயன் ஒவ்வொரு ஆட்டையும் செல்லப் பெயர் கொண்டு அழைப்பது போல இவரும் ஒவ்வொருவரையும் பெயர்செல்லி அழைப்பார். தன்னில் கோபத்துடன் வருபவரை சாந்தப்படுத்தி அனுப்பும் அளவிற்கு ஆன்மீக சக்தி இவரிடமிருந்தது. இவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுக்க முடியாமல் போய்விட்டதே என்று பலர் ஆச்சரியப் பட்டதுண்டு.


இதற்கு இவரது செயலர்கள் அருட்பணியாளர்கள் கிங்சிலி சுவாம்பிள்ளை, ஜோ.பொ.இ செல்வராஜா, பு.அ. இராஜரட்ணம் போன்றவர்கள் துணைநின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும் ஒருவருடைய குறிப்பிட்ட பிரச்சனை பற்றித் தூர அவர் வரும்போதே முகத்தின் குறிப்பறிந்து, அவர் கூறமுன்பே அவரது சிக்கலையும் அதற்கான தீர்வையும் சொல்லித் திக்குமுக்காட வைத்துவிடும் இவரது மதிநுட்பத்திற்கு இவரது செயலர்கள் உதவியிருப்பார்கள் என்பது சந்தேகமே. அனைத்தையும் அறிய எங்கும் இவருக்கென்று ஆட்கள் இருந்தனர் என்று பலர் கூறுவதுண்டு. ஆனால் வவுனியாவில் அவ்வேளை பணியாற்றிக்கொண்டிருந்த மறை போதகர் எஸ். அந்தோனிப்பிள்ளையிடம் வவுனியாவில் இருந்து மூன்று மைல்கள் காட்டுப்பகுதிக்குள் இருந்த வீரபாகு குடும்பத்தின் திருமணத்தைச் சீராக்க உதவும்படி கூறியது இவர் தன்மக்களை மிகவும் இயல்பாகவே அறிந்திருந்தார் என்பதற்கு எடுத்துக்காட்டு எனலாம்.

ஆயரின் மறைவும் ஆயரின் நினைவும் தன் துன்பம் நோக்காது மக்கள் பணியில் தன்னைக் கரைத்ததனால் முதல் சுதேச பணியாளராகத் தனக்கிருந்த நோயைப் பொருட்படுத்தாமலும் வெளிப்படுத்தாமலும் இருந்த படியால் இவரது சாவு திடீர் நிகழ்வாகவே நடந்தேறியது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பிரபல்யமாய் இருந்த வைத்திய கலாநிதி. ஜே.பி.சி. பிலிப்ஸின் உதவியுடன் அடிக்கடி நோயின் தீவிரத்தன்மையைக் குறைத்துவந்தார். 1972.07.17 திங்கள் அன்று கூட வைத்தியரின் ஆலோசனையுடனேயே பலாலியில் இருந்து கொழும்புக்கான விமானப் பயணத்தை அருட்பணி. ஜோ.பொ.இ. செல்வராஜாவின் துணையுடன் மேற்கொண்டார். விமானத்தில் ஏற்பட்ட கடும் சுகவீனம் காரணமாகக் கொழும்பு புனித மிக்கேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பிரபல வைத்தியர்கள் பலரது சிகிச்சைகளும் பலனளிக்காமல் போய்விட இரவு 11.45 மணிக்கு உயிர் துறந்தார். இவ்வாறு எவரும் எதிர்பாராது சாவைத் தழுவிக் கொண்ட இவரது உடலை, இவருடன் தேசிய மயமாக்கல் தொடர்பாகப் பல முரண்பாடுகளைக் கொண்டிருந்தாலும், இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்திற்கு விசேட விமானப்படை விமானத்தில் அனுப்பியமை இவரில் பிரதமர் கொண்டிருந்த மதிப்பை எடுத்துக்காட்டியது. இலங்கை வாழ் அமைச்சர்கள் அரச, அரச சார்பற்ற அதிகாரிகள், மதத்தலைவர்கள் பெருந்திரளான இறைமக்கள் அனைவரும் பிரசன்னமாக இருக்க யாழ். பேராலயத்தில் 1972.01.21 வெள்ளி மாலை 4.30 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது.

இவரின் பெயரில் கல்வி நிதியம் ஒன்று இவரது சாவின் ஓராண்டு நிறைவில் 1973.07.17இல் ஆரம்பிக்கப்பட்டது. மறைமாவட்ட ஆயரின் கண்காணிப்பின் கீழ் செற்பட்ட இந்த நிதியத்தினால் இன, மத, வேறுபாடுகளின்றி பல கல்லூரி மற்றும் பல்கலைக்கழக ஏழை மாணவர்கள் தொடர்ந்துவந்த பல ஆண்டுகள் பயன் பெற்றனர். ஏற்கெனவே ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் 1972 ஆவணியில் கொண்டாடப்பட்ட கல்லூரியின் நூற்றாண்டு நினைவாக அடிக்கல் நாட்டப்பட்டு நிறுவப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் இவரின் சாவோடு "ஆயர் எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப, தொழிற் பயிற்சி நிறுவனம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. போரின் காரண-மாக இயந்திரங்களும், தளபாடங்களும் காணாமல் போனதுடன் இது கைவிடப் பட்டுள்ளது. *(தொடரும்....)*

# காவலன் கலசம்

**களத்தில் துடுப்பெடுத்தாடும் வீரன்**
**175 ஓட்டங்களைத் தொட்டுவிட்டான்.**
**அவன் வீரன்தான். அவன் பாராட்டிற்குரியவன் தான்.**
**இருநூறு ஓட்டங்களை எடுத்தவர்களும் உண்டு.**
**ஏன், முன்னூறு ஓட்டங்களைத்**
**தாண்டியவர்களும் உண்டு. ஒப்பிட்டுப்பார்ப்பது**
**ஆரோக்கியமற்றது. இப்பொழுது**
**நூற்று எழுபத்து ஐந்து ஓட்டங்களை**
**எடுத்தவரைப் பாராட்டுவோம்.**




### அமலமரித் தியாகிகள்

இந்த ஈழ மண்ணில் (நான் ஈழம் என்று அழைப்பது இலங்கை என்ற இந்தச் சிறிய தீவை) அமல மரித் தியாகிகள் தடம் பதித்து இவ்வருடம் நூற்று எழுபத்து ஐந்து ஆண்டுகளாகின்றன. இன்னமும் களத்தில் நிற்கிறார்கள். அதாவது இன்னமும் 'அவுட் ஆகவில்லை. ஆறு, நாலு என்று துடுப்பெடுத்து ஆடியவர்கள் இப்பொழு தெல்லாம் ஒன்று, இரண்டு என்ற எண்ணிக்கையிலேயே துடுப்பெடுத்தாடுகிறார்கள். களைப்புத் தோன்றுகின்றது. ஒரு சோர்வு இளையோடுகிறது. யார் இவர்கள்?

ஆங்கிலத்தில் Oblates of Mary Immaculate என்ற பெயர் கொண்டவர்கள், தமிழில் அருட்திரு பாவிலுப்பிள்ளை, இம்மானுவேல் போன்ற பெரியோர்களால் மாசற்ற மரியாளின் தியாகிகள் (மா-மதி) என்று தொடக்கத்தில் அழைத்தவர்கள். இவர்கள் ஒரு பெரிய சிலுவையை அணிந்திருந்த காரணத்தினால் பொதுமக்களிடையே 'குருசு போட்ட சுவாமிகள்' என்று அடையாளப்படுத்தப்பட்டார்கள். 'மாமதி' மக்களிடையே பரவ முன்னரே அந்த மொழிபெயர்ப்பு அழகல்ல என்று சொல்லி, அதற்குப் பதிலாக அமலமரித் தியாகிகள் (சுருக்கமாக - அமதி) என்றழைப்பது தான் நல்லது என்று இளங் குருவாக இருந்த காலத்திலேயே செல்வரட்ணம் என்ற பெயர் கொண்ட இச்சபையைச் சார்ந்த ஒருவர் குரல் எழுப்பினார். அந்தக் காலத்தில் இவர் நன்கு தமிழ் பேசியும், எழுதியும் வந்ததினால் இவருக்கு ஆதரவு இருந்தது.

மூத்த குருவாகிய Z.N.Cross அடிகளார் இவருக்கு ஆதரவாக இருந்தார். ஆகவே அந்த நாள் இவருக்குரியதாயிற்று. அமலமரித் தியாகிகள் என்ற பெயர் நிலைத்தது. பின் வந்த தலைமுறையினர் மீன் தண்ணீரை நாடுவது போல இந்தப் பெயராலேயே தங்களை அழைத்தனர்.

இதனை ஏற்றுக்கொள்ளாத மூத்த குருக்கள் இருவரும், புதிய பெயரைச் சகித்துக் கொண்டாலும், தங்கள் பெயர்களின் பின்னால் 'மா.ம.தி' என்றே எழுதி வந்தார்கள். விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை.

### துறவற சபைகள்

கத்தோலிக்க திருஅவையில் நூற்றுக்கணக் கான துறவற சபைகள் உண்டு. வனாந்தர அந்தோனியார் (அன்ரனி) யும், வனாந்தர பவுலும் தான் கத்தோலிக்க அவையில் துறவறத்து முன்னோடிகள் (கி.ப.மூன்றாம் நூற்றாண்டு) என்றாலும், கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் தான் முதல் துறவற சபை ஆரம்பித்தது. பெனடிக்ற் என்பவரின் பெயரில் Monasticism அதாவது துறவற மடத்தினுள் முடக்கப்பட்டு கடுமையான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வாழ்வோர் பெனடிக்ற் அவர்களாலே நிறுவப்பட்டது. அனைத்துத் துறவற சபைகளுக்கும் அடித்தளமாக இருப்பது பெனடிக்ற் அவர்களின் சட்டநூல் (The Rule of St.Benadict).

காலத்தின் தேவை நோக்கித் துறவறம் ஒரு பரிணாம வளர்ச்சி கண்டது. இதனது ஆறாவது தோற்ற வெளிப்பாடாக - The Missionary Religions Congregations அதாவது வேறு நாடுகளுக்கு அதுவும் நற்செய்தியை அறியாத மக்களுக்கு நற்செய்தி நவிலவென்று துறவற சபைகள் நிறுவப்பட்டன.

துறவற சபைகளின் வரலாறு பதினாறு நூற்றாண்டுகளின் வரலாறு. (இந்த வரலாற்றைச் சுருக்க மாக கரவையூர் செல்வம் எழுதிய 2000 களை நோக்கித் துறவறம் என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்ட ஒரு சிறு நூலைப் பார்க்கவும்) அந்த வரலாற்றைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. ஆனால் அமலமரித் தியா-கிகளின் தோற்றத்தை இந்த வரலாற்றுப் பின்னணியிலே பார்ப்பது அர்த்தமுள்ளதாக இருக்கும்.

### தொடக்கம்

பிரெஞ்சுப் புரட்சியின் பின்னர் பிரான்சில் பல துறவற சபைகள் நிறுவப்பட்டன. அதில் ஒன்று தான் பிரபு இயூஜின் டி மசனட் என்பவரால் நிறுவப்பட்ட சபை. இன்று அமலமரித் தியாகிகள் என்ற பெயருடன் வாழ்ந்து பணிபுரிபவர்கள். இதனைச் சற்று விரிவாகப் பார்க்க / படிக்க விரும்பியவர்கள் கரவையூர்ச் செல்வம் எழுதிய 'புரட்சியில் பூத்த பூ' என்னும் நூலைப் படித்துப் பார்க்கலாம். இங்கு நான் வலியுறுத்த விரும்புவது என்னவென்றால், இந்த சபையின் நிறுவுனர், நாற்றிசையும் சென்று நற்செய்தியை நவிலவென்று இச்சபையை நிறுவினவர் அல்ல. பதிலாக, பிரெஞ்சுப் புரட்சியினால் அழிந்த பிரெஞ்சு திரு அவையை மீளக் கட்டியெழுப்பவென்றே பிரான்சு நாட்டின் தென் கோடியில் அமைந்துள்ள மார்சேயின் நகரத்தின் அருகே உள்ள 'எக்ஸ் அன் பிறொவான்ஸ்' என்ற சிற்றூரில் இச் சபையை நிறுவினார். அவர் தொடக்கத்தில் தனது சபைக்குக் கொடுத்த பெயர் 'புனிய சாள்ஸ் உடைய தியாகிகள்' குறுகிய வட்டத்துள் அடக்கமான ஆரம்பம். இந்த இரண்டு உண்மைகளும் வரலாற்றுப் பதிவுகள்.

### புதிய அழைப்பு

இந்தக் கட்டத்தில், ஈழத்து வடபகுதியைச் சேர்ந்த ஆயர் பெற்றகீனி உரோமை சென்ற நேரம் தனது மறைமாவட்டத்தில் பணிபுரியக் குருக்கள் தேவையென்று தேடலானார். அப்பொழுது இவர் சந்தித்த ரூளின் ஆயர் பேர்ட்டோ கூறினார்:

"பிரான்சில், எக்ஸ் அன் புறொவன்சில் ஒரு குரவர் இருக்கிறார். வறியோருடன் வாழ்ந்து, அவர்கள் மொழிபேசி, அவர்களுக்குப் பணிபுரியவென்றே ஒரு துறவற சபையை நிறுவி உள்ளார். வறியோர் என்றதும் அவர் மனம் நெகிழ்ந்துவிடும்" என்று நம்பிக்கை ஊட்டி அனுப்பினார்.

இதில் ஓர் அதிசயம்! புதுமை என்றும் சொல்லலாம். பிரெஞ்சுப் புரட்சி கத்தோலிக்க திரு அவையைமட்டும் அழிக்கவில்லை. பிரபுத்துவத்தையும் ஆட்சிசெய்தஅரசபரம்பரையையும்அழிந்தது. டிமசெனட் பிரபுத்துவ குடும்பத்தைச் சார்ந்தவர். பிரபுத்துவம் அழிக் கப்பட்டாலும், பிரபுத்துவ குணாதிசயங்கள் அவரிடமி ருந்து அழிக்கப்பட்டவில்லை. பிரபுத்துவ ஆணவம், அதிகாரம், மேம்பாட்டு மனப்பான்மை இயூஜின் டி மசனெட் அவர்களிடம் இருந்தன என்றே அவரது வாழ்க்கையை ஆய்வு செய்து எழுதிய நூல்களும், கட்டுரைகளும் பதிவு செய்துள்ளன. அதிசயம் என்ன?

பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர், பிரபுத்துவ குணங்களில் இருந்து விடுபடாதவர் எவ் வாறு மிக வறுமையில் வாழ்வோரின் மொழிபேசி, அவர்களின் நல்வாழ்விற்காகப் பணிபுரிய முற்பட்டார்? அதுதான் அதிசயம். தனது சபையின் விருதுவாக்காக "எளியோர்க்கு நற்செய்தி நவிலல்" என்று தான் எழுதி யுள்ளார். தனது குருக்களை அதற்கே அர்ப்பணிக்க வேண்டினார்.

### இதென்ன துணிச்சல்?

பிரான்ஸ் நாட்டை மையமாக வைத்தே அவரது சபையின் பணி தொடங்கியது. அதற்கப்பால் அவர் சிந்திக்கவில்லை. ஆனால், முன்னால் பின்னால் தெரியாத உலகத்தில் அறிமுகமே இல்லாத ஒரு சிறு தீவிலிருந்து ஓர் ஆயர் இயூஜினைச் சந்தித்து "வறுமை யிலும் வறுமையான நாடு இலங்கை. அங்கு பொரு ளாதார வறுமை, கல்வி வறுமை, மருத்துவ வறுமை, எல்லாவற்றையும் மேவி நற்செய்தி வறுமை, பணிபுரியக் குருக்கள் இல்லை" என்று அழாக்குறையாக வேண்டுகிறார். டி மசனெட் மனம் நெகிழ்ந்தது. ஓர் அசாத்தியத் துணிவு. "குருக்களை அனுப்புகிறேன்" மசனெட்டின் பதில். இதென்ன துணிவு? நாட்டைப்பற்றி எதுவுமே தெரியாது. சபையின் தொடக்க காலம் வேறு. எப்படி "அனுப்புகிறேன் என்று துணிவார்? பிரபுத்துவத்தின் ஆணவத் துணிவா? அன்றேல் கிறிஸ்துவில் நன்கே ஊன்றிய விசுவாசத் துணிவா? எல்லா வற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், அவருடைய ஆழமான உறுதியான விசுவாசம் தான் என்ற முடிவுக்கே வரவேண்டி உள்ளது.

அமலமரித் தியாகிகள் ஈழத்துக்கு வருகை தந்ததை எழுத முன்னர், இயூஜினின் துணிச்சலை இன்னும் சில உதாரணங்கள் தந்து பார்ப்போம்.

வடதுருவத்தில் வாழ்ந்த எஸ்கிமோவுக்குத் தனது குருக்களை அனுப்பினாரே! அந்த எஸ்கிமோக்கள், இவரது குருக் களின் தோலின் தோற்றத்தைப் பார்த்து (பிரான்ஸ் நாட்ட வர்) இவர்களில் ஒருவரைக் கொன்று உண்டார்கள். அப்படியிருந்தும் வடதுருவத்திற்கு அனுப்பத் தயங்கினாரா? இல்லை. கனடாவில் வாழ்ந்த சுதேசிகளைப் (அதாவது வறுமையிலும் மிகவும் பின் தங்கிய கலாசாரத்திலும் வாழ்ந்தவர்கள்) பணிக்கு அனுப்பினாரே! அதேவேளை, தென்னாபிரிக்காவுக்கும் அனுப்பினாரே!

இலண்டனில் உள்ள Tower Hill என்னுமிடத்தில் வறுமையில் வாழ்ந்த மக்களுக்குப் பணிபுரியத் தனது குருக் களை அனுப்பினாரே! ஒரு சாதாரண மனித நிலையில் நின்று பார்த்தால் அவரின் மனநிலை புரியாது. எனக்குப் புரியவில்லை.

பிரான்ஸ் நாட்டு மக்களுக்கென நிறுவிய ஒரு சபை, தொடங்கிய காலத்தில் இருந்து அவ்வளவு விரைவில் தனது சொந்த நாட்டு எல்லைகளைக் கடந்து தூர உள்ள நாடுகள் நோக்கிச் சென் றார். ஆகவே தனது தொடக்க கால நோக் கத்தை மாற்றினார். இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்? மக்கள் தேவை எதுவோ அங்குதான் அமலமரித் தியாகி களின் பணி என்பது அவரது ஆணித்தரமான சிந்தனை. மனம் விரிந்தது. எல்லைகள் அகன்றன. சபையின் நோக்கம் பரிணாம வளர்ச்சி கண்டது. அப்பொழுது அமலமரித் தியாகிகள் சபை "நாற்திசையும் நற்செய்தி நவிலும்" ஒரு missionary துறவற சபையாக மாறியது. உரோமையின் அங்கீகாரம் பெற்றது. இந்த நேரம் தான் புனித சாள்ஸ் சபை - அமலமரித் தியாகிகள் சபையாகப் பரிணாமித்தது.

மக்களின் தேவையை அதுவும் அவசரத் தேவை யைப் புறக்கணித்து அது எங்கள் "கரிசம்" அல்ல என்று கூறும் துறவற சபைகளுக்கு இயூஜின் டி மசனெட் அவர்களின் வாழ்க்கையையும், தூரத்துப் பார்வையையும், தேவைகளை நோக்கி சபையின் குறிக்கோள்களை இலட்சியங்களாக மாற்றும் மனப் பக்குவம் ஒரு பெரும் சவால்.

இப்படிப்பட்ட துணிச்சலோடு மிகவும் கடினமான வறுமையான பணித்தளங்களை நோக்கிச் சென்ற காரணத் தினால்தானோ என்னவோ, பதினோராம் பத்திநாதர் (Pious xi ) அப்பொழுது வாழ்ந்த அமதிகளுக்கு ஒரு விருது கொடுத் தார். அதாவது "மிகவும் கடினமான களங்களில் பணிபுரி வதில் வல்லவர் தான் அமலமரித் தியாகிகள்" கேட்டவரெல் லாம், திருத்தந்தையின் விருதுக்கு அமதிகள் தகுதியுடைய வர்களென்றே புகழ் சூட்டினார்கள். இதனால்தான், நான் மேலே கூறியிருந்தேன்: சபையின் தொடக்க காலத்தில் இவர்கள் ஆறென்றும், நாலென்றும் ஓட்டம் பெற்றார்கள்.

### அருங்கொடையில் தேக்கமா?

இரண்டாம் வத்திக்கான் சங்கத்து முடிவில், பொதுச் சங்கத்தின் புதுப்பார்வைக்கு ஏற்ப, துறவற சபைகள் தங்களைப் புதுப்பிக்க வேண்டுமென்று ஆறாம் சின்னப்பர் (Paul vi) அழைப்பு விடுத்தார். அனைத்துத் துறவற சபைகளும் இந்த அழைப்பை ஏற்ற னர். சில சபைகள் முண்டியடித்துக் கொண்டு தங்கள் தங்கள் நிறுவுனர்களை நோக்கிப் படையெடுத்தார்கள். இந்தப் படையெடுப் பில் சில புதிய சொற்களும், சொற்றொடர்களும் தோன்றின. அதில் ஒன்று தான் "Charism" தமிழில் "அருங்கொடை" என்று மொழிபெயர்த்தார்கள்.

வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர், துறவற சபையி-னர் தங்கள் தங்கள் உடைகள் மூலம் (அணிந்திருக்கும் உடைகள்) தங்களை அடையாளப்படுத்தினர். இரண்டாவது வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு இந்த "அருங்கொடை"யால் அடையாளப்படுத்த முனைந்தனர்.

*இதுவரை நன்று. ஆனால்,*

இந்த "அருங்கொடை" என்றால் என்ன?
அதன் அர்த்தமென்ன?
அது மாறாத் தன்மை கொண்டதா?
தேக்கமுடைய ஒரு பொருளா?
இந்த அருங்கொடைக்கும் இலட்சியத்திற்கும் தொடர்பு உண்டா, வேறுபாடு உண்டா?
தூரத்துப் பார்வை (Vision) என்றால் என்ன?
தூரத்துப் பார்வைக்கும் அருங்கொடைக்கும் வேறு பாடு என்ன? தங்கள் தங்கள் பணிகளைக் கொண்டுதான் அருங்கொடையை உருவாக்கினார்களா?
ஒது புதுப்பணிக்கு அதுவும் மக்களின் அவசர தேவைக்கு அழைப்பு வரும்பொழுது, அந்த அழைப்பை ஏற்க இந்த "அருங்கொடை" ஒரு தடையா?

**கரவையூர்ச் செல்வம்**

*(வளரும்...)*

# காவலன் கலசம்

# அரகேசரி விருது பெற்ற அண்ணாவியார் பஸ்ரியாம்பிள்ளை அல்பிரட்

**பாசையூர் கிராமத்தின் அண்ணாவி மரபில் 1939 ஆம் ஆண்டு உதித்து, தொடர்ச்சியாக தனது 13 வயதில் இருந்து கூத்தரங்கில் நடிகனாக நெறியாளனாக, மிருதங்க கலைஞராக அறுபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி, யாழ்ப்பாண கத்தோலிக்கக் கூத்துமரபின் அடையாளமாகத் திகழ்கின்ற அண்ணாவியார் பஸ்ரியாம்பிள்ளை அல்பிரட் அவர்கள் அண்மையில் யாழ் மாநகர சபை முதன்முதலாக நடத்திய முத்தமிழ் விழாவில் இயல், இசை, நாடகத்திற்கென மூவர் தெரிவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட கௌரவத்தில் நாடகத்துறைக்கெனத் தெரிவு செய்யப்பட்டு 'அரசகேசரி' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அவரை மகிழ்வோடு பாராட்டுவதுடன், அவரது அரங்க அனுபவங்களை அவரது நேர்காணல் மூலமாகப் பதிவு செய்வதில் இன்றைய கலைக்காவலன் மகிழ்வடைகின்றது.**

**நீங்கள் கூத்துத்துறையில் எவ்வாறு ஈடுபடத்தொடங்கினீர்கள்?**

நான் கூத்துப்பரம்பரையில் பிறந்தவன்,எனது 13 வயதில் புனிதவதி என்ற நாட்டுக் கூத்தில் அரசனாக நடித்தேன். அன்றில் இருந்து இன்று வரை கூத்தில் ஈடுபட்டு வருகின்றேன். பரம்பரை என்று சொல்லும் போது எனது தந்தையார் பஸ்ரியாம்பிள்ளை அண்ணாவியார். அவரது தந்தையார் ஞானப்பூ ஒரு அண்ணாவியார், எனது பெரிய தகப்பன் மடுத்தீஸ் அவருடைய மகன் பாவிலுப்பிள்ளை எல்லோருமே அண்ணாவிமார்கள், மிருதங்கம் வாசிக்கின்ற செபஸ்தியாம்பிள்ளையும் எனது பெரிய தகப்பனாரின் மகன். அப்படி எல்லோரும் பரம்பரையாகக் கூத்தாடி வருகின்றோம். அத்துடன் எங்களது பாசையூர்க் கிராமம் ஒரு கூத்துக் கிராமம் அதனால்தான் சிறியவயதில் இருந்தே நான் கூத்துத் துறையில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைந்தது.

**ஒரு கூத்து அண்ணாவியாராகவும் புகழ்பெற்ற கூத்தராகவும் நீங்கள் இருப்பதற்கு உங்களுக்கு உதவிய விடயங்கள் எவை ?**

நான் ஏற்கனவே சொன்னது போல எங்களது பரம்பரையே கூத்தினை நிகழ்த்துவதை ஒரு கடமையாகக் கொண்டிருந்தனர். சிறியவயதில் கூத்துக்களைப் பார்த்தோம். பின்னர் நடிக்கத் தொடங்கினோம். எனது தந்தையார் தான் எனது குரு. அவரிடம் இருந்து தான் கூத்துக் கலையின் நுட்பங்களைக் கற்றுக்கொண்டேன். மிருதங்கமும் வாசிக்கக் கற்றுக் கொண்டேன். படிப்படியாகச் சிறிய பாத்திரங்களில் இருந்து பெரிய பாத்திரங்கள் வரை நடிக்கத் தொடங்கினேன். எனது கிராமத்தில் மட்டுமன்றி அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த எல்லா அண்ணாவிமார்களோடு நடித்துள்ளேன். பூந்தான் யோசேப்பு, பக்கிரி சின்னத்துரை, ஒட்டுக் காலி, நட்டுவன் அந்தோனி போன்ற கூத்தில் பெரிய ஜாம்பவான்களாக இருந்தவர்களுடன் எல்லாம் சரிக்குச்சமனாக நடித்துள்ளேன். அந்த அனுபவங்கள் எல்லாம் தான் என்னைக் கூத்தில் பிரகாசிக்கச்செய்தது. அதுமட்டுமன்றி எமது ஆலயத்தில் பசாம் பாடல்கள் நடைசாரிப் பாடல்கள் எனப் பலவற்றையும் தொடர்ச்சியாகச் சிறுவயதில் இருந்தே பாடி வருகின்றேன். அவையும் எனது ஆற்றலை மேம்படுத்தி இருக்கின்றன.

**நீங்கள் நடித்த முக்கிய கூத்துக்கள் சிலவற்றைக் கூறுங்கள்**

"புனிதவதி, ஞானசவுந்தரி, கண்டி அரசன், சந்தியோகுமையோர், வீரத்தளபதி, சற்குணானந்தன், அந்தோனியார், கிளியோபெற்றா, சங்கிலியன், எஸ்தாக்கியார், இம்மனுவல், யூலியஸ்சீசர், பண்டாரவன்னியன், தேவசகாயம் பிள்ளை, செனகப்பு, கற்பலங்காரன், தியாக இராகங்கள், செந்தூது..." எனப் பல. மேடைகளில் மட்டுமன்றி இலங்கை வானொலியிலும்,ரூபவாகினியிலும் நடித்துள்ளேன்.

**உங்களுக்குப் புகழ் தேடித் தந்த பாத்திரங்கள் பற்றி?**

நான் ஆரம்பத்தில் 'நாடகக் காரன்' பாத்திரங்களே அதிகம் ஏற்று நடித்தேன். எஸ்தாக்கியாரில் எஸ்தாக்கி, தேவசகாயம்பிள்ளையில் தேவசகாயம், ஞானசவுந்தரியில் பிலேந்திரன் எனப் பல பாத்திரங்கள் அப்பாத்திரங்கள் எனக்குப் புகழ் தேடித் தந்தன. பின்னர் எனது குரல் வளத்தால் இராஜபாட் பாத்திரங்களையே செய்யப் பணித்தார்கள். தொடர்ந்து இன்றுவரை இராஜபாட் நடிகனாக நடித்து வருகின்றேன். கட்டப்பொம்மன், பண்டாரவன்னியன், யூலியஸ் சீசர், கண்டியரசன்..." என்று பல அரச பாத்திரங்கள் எனக்குப் புகழ் தேடித்தந்தன.

**எப்போதிருந்து கூத்துக்களைப் பழக்கத் தொடங்கினீர்கள் ?**

எனது நாற்பது வயதில் இருந்து கூத்துக்களைப் பழக்கத் தொடங்கிவிட்டேன். நான் பழக்கிய கூத்துக்கள் 'புனிதவதி ஞானசவுந்தரி, வீரபாண்டிய கட்டப்பொம்மன், சஞ்சுவான், பண்டார வன்னியன், பிரான்சீஸ் அசிசியார், எஸ்தாக்கியார் சங்கிலியன்' என நூறுக்கும் அதிகம். 1962 ஆம் ஆண்டு, உதய சூரியன் நாடக மன்றம் என்ற ஒருமன்றத்தினை நானே எனது கிராமத்தில் உருவாக்கினேன். அதற்கூடாகவும் பல கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றினேன். இன்று பாசையூரில் கூத்தாடுகின்ற பலர் எனது மாணவர்கள் தான். பல இளையவர்கள் என்னிடம் பயின்று இன்று சிறப்பாகக் கூத்துக்களை ஆடிவருகின்றார்கள்.

**கிராமத்தில் மட்டும்தான் கூத்துக்களைப் பழக்கினீர்களா?**

இல்லை.கிராமத்துக்கு வெளியேயும் வடமாராட்சியில் பல கிராமங்களில் கூத்துக்களைப் பழக்கினேன், அதுமட்டுமன்றி பல பாடசாலைகளில் மாணவர்களுக்குப் பழக்கியுள்ளேன். வேம்படி மகளிர் கல்லூரி, சென்யோண்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, சென்யோசப் பாடசாலை, புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி எனப் பலவற்றுக்குப் பழக்கியுள்ளேன்.

**மிருதங்கக் கலையை எவ்வாறு கற்றுக்கொண்டீர்கள்**

மிருதங்கக் கலையை நான் சிறிய வயதிலேயே எனது பெரியப்பாவிடம் பழகினேன். அதே நேரத்தில் எனது தந்தையாரும் நன்றாக மிருதங்கம் வாசிப்பார், அவர்களையெல்லாம் பார்த்துப் பழகிக் கொண்டேன். அக்காலத்தில் அண்ணாவியெண்டால் அவர் மத்தளம் வாசிக்கக் கூடியவராக இருக்கவேண்டும். எனது பதினைந்து வயதிலேயே நான் ஓரளவு மிருதங்கம் வாசிப்பேன்.தொடர்ந்து மிருதங்கம் வாசிக்கத் தொடங்கினேன். பாசையூரில் மட்டுமன்றி பருத்தித்துறை, மணற்காடு, கட்டைக்காடு, குடத்தனை, தாளையடி, செம்பியன்பற்றுப் போன்ற வடமாராட்சியின் பல கிராமங்களில் அந்தக் காலத்தில் கூத்துக்களுக்கு நான் மிருதங்கம் வாசித்தேன். நான் பிரதான பாத்திரம் எடுத்து நடிக்கத் தொடங்கியதன் பின்னரே மத்தளம் வாசிப்பதனைக் குறைத்துக் கொண்டேன். பின்னர் நான் பழக்கும் கூத்துக்களுக்கு நானே மிருதங்கம் வாசிப்பேன். அதுபோலவே எமது கூத்துமரபினை வளர்க்க முயற்சி எடுத்தவராகிய காலஞ்சென்ற மெற்றாஸ் மயில் அவர்கள் பாரம்பரிய மேம்பாட்டுக்கழகம் ஒன்றினை நடத்தி வந்தார். அவரது கோவலன் கூத்து, வேளம்படுத்த வீராங்கனை போன்ற கூத்துக்கள் இலங்கையின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. அவருக்கு நான்தான் பிரதான மிருதங்கக் கலைஞனாகப் பணியாற்றி இருந்தேன்.

**நீங்கள் பெற்ற விருதுகள் பற்றிக்கூற முடியுமா?**

1977 ஆம் ஆண்டு முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள்



எனக்கு 'தேசியக் கலைவேந்தன்' என்ற பட்டத்தைத் தந்தார். அதற்குப் பின்பு நாடக மாமன்னன், ஏழிலிசை மன்னன், சிம்மக் குரலோன் கலைக்குரிசில், கலைப்பொக்கிசம், கலைமாமணி எனப் பல விருதுகள் கிடைத்தன. யாழ்இரத்தினா, கலாபூஷணம், ஆளுநர் விருது என எல்லா அரச விருதுகளும் எனக்குக் கிடைத்துள்ளது. இறுதியாக யாழ் மாநகர சபை அரச கேசரி என்ற விருதைத் தந்திருக்கின்றது.

**காவலூர் யோவான்**

**திருமறைக் கலாமன்றத்தில் எப்போதிருந்து ஈடுபட்டீர்கள்?**

1984 ஆம் ஆண்டில் இருந்து திருமறைக் கலாமன்றத்தில் நடிக்கத் தொடங்கினேன். அதன் அங்கத்தவராக இருக்கின்றேன்.மரியசேவியர் அடிகளாருக்கு என்னிலே அதிகமான பிடிப்பு, எனது குரல் வளத்தினை எப்போதும் பாராட்டுவார். கூத்துக்களை மன்றத்தினால் பழக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து நடித்து வருகின்றேன் அமல மரித்தியாகிகள், தேவசகாயம் பிள்ளை, வீரத்தளபதி, எஸ்தாக்கியார், செந்தூது எனப் பல கூத்துக்களிலும் பிரதான பாத்திரம் ஏற்று நடித்துள்ளேன். அதுமட்டுமன்றி சிலுவை உலா போன்ற திருப்பாடுகளின் நாடகங்களிலும் ஞானசவுந்தரி இசை நாடகத்திலும் மன்றத்தில் நடித்துள்ளேன். மன்றத்தால் வெளியிடப்பட்டகூத்து மெட்டுக்கள் ஒலிப்பதிவிலும் நான் பல பாடல்களைப் பாடியுள்ளேன். நண்பர்களான அண்ணாவியார் பேக்மன் ஜெயராஜா, பாலதாஸ், எல்லாரோடும் இணைந்து பல பணிகளை ஆற்றி இருக்கின்றேன் கூத்துக்கலையின் வளர்ச்சியில் மரியசேவியர் அடிகளும் திருமறைக் கலாமன்றமும் ஆற்றிய பணிகள் அதிகம்.

**அந்தக்காலக் கூத்துக்களுக்கும் இந்தக்கால நிலமைகளுக்கும் என்ன வேறுபாடுகளைக் காணுகின்றீர்கள்?**

தற்போது எல்லாமே மாறி விட்டது. அந்தக்காலத்தில் கூத்துக்கள் இரண்டு இரவுக் கூத்தாக நடைபெறும். பாதிக்கதை முதல் நாளும் மிச்சக்கதை இரண்டாம் நாளும் நடக்கும் நான் சிறிய வயதில் ஒரிரண்டு கூத்துக்களைப் பார்த்திருக்கின்றேன். பிறகு ஒருநாள் கூத்தாக மாறிவிட்டது. இப்போது ஒரு மணித்தியாலக் கூத்து அரைமணித்தியாலக் கூத்து என்றெல்லாம் மாறிவிட்டது. அதுமட்டுமன்றி அந்தக் காலத்தில் கூத்து மேடை நன்றாக உயர்த்தப்பட்டிருக்கும், மேலே கூரை போல் வேய்ந்திருப்பார்கள். பக்கங்களிலும் கிடுகளால் தட்டி கட்டியிருப்பார்கள். நாலுபக்கமும் பெற்றோமைக்ஸ் வைத்திருப்பார்கள் அப்போது மின்சாரம் இல்லை. வேட உடைகள் கூட வித்தியாசம். அக்காலத்தில் காற்சட்டை போன்ற உடைகள் தான் பயன்படுத்தினார்கள். குஞ்சங்கள் வைத்து அழகாக அந்த உடைகளைத் தைத்திருப்பார்கள்.பின்னர் தான் சாறி கொய்து தாறுபாய்ச்சி கட்டும் வழக்கம் வந்தது. அது முதல் முதலாக பூந்தான் யோசேப்பு அவர்கள் பழக்கிய கருங்குயில் குன்றத்துக் கொலை நாடகத்தில் தான் அந்த உடைகள் பயன்படுத்தினார்கள். பிலிப்பு, பெஞ்சமின் போன்றவர்கள் தான் அப்போது வேட உடைகள் செய்தார்கள். ஒலிவாங்கிகள் அக்காலத்தில் இல்லை எங்களுடைய சத்தம் அதுக்கு சமமாய் இருக்கும். அதனாலே தான் நாங்கள் உச்சஸ்தாயியிலே பாடக் கூடியவர்களாக இருந்தோம். இப்போது அப்பிடிப் பாடுபவர்களே இல்லை. அப்போது ஊர் முழுவதும் கூத்துப் பார்க்கக் கூடிவரும். விடியவிடிய அசையாமல் இருந்து கூத்துப் பார்ப்போம். சிறியவயதில் நாங்கள் முன்னரே போய் பாய்விரித்து இடம்பிடிப்போம். அவ்வளவுக்கு மக்கள் வெள்ளமாக இருப்பார்கள். அந்தக்காலத்தில் பொது மக்களுக்கு வேறுவிதமான பொழுது போக்குகள் இல்லாதிருந்த காரணத்தினாலும் சிறந்த கூத்துக்கள் தொடர்ச்சியாகமேடையேற்றப்பட்டு வந்ததனாலும் பார்வையாளர்கள் கூத்துக் கலை பற்றிய ஆர்வம் கொண்டவர்களாகவே இருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் நிலைமை தலைகீழாக மாறிவிட்டது மக்களது இரசிக்கும் தன்மை மாறிவிட்டது. சினிமாத் தொடர் நாடகங்கள் போன்ற நிகழ்வுகளால் இக்கால மக்களின் கலைத்துறை ஈடுபாடும் அவற்றினை மதிக்கும் பக்குவமும் அருகி வருகின்றன. ஆகவே இக்காலத்தில் கூத்துக்களை மேடையேற்றும் போது மிகச்சிறப்பான முறையில் நெறியாள்கை செய்து மேடையேற்றினால் தான் ஓரளவுக்கு மக்கள் ஆதரவைப் பெறலாம்.

**இக்காலத்தில் இந்த கூத்துக் கலையை மேம்படுத்துவதற்கு எவ்வாறான முயற்சிகள் செய்யப்படவேண்டும்.?**

கூத்துக்கலைகளுக்கு சவால் மிகுந்த காலமாகவே இந்தக்காலத்தைக் கருத வேண்டியுள்ளது. நவீன வசதிகளாலும் நாகரீக மாற்றங்களினாலும் அள்ளுப்பட்டுக் கொண்டு செல்லும் இந்தக் கால மக்களைப் பண்பாட்டு நிகழ்வுகளை இரசிக்கச் செய்தல் என்பது இலகுவானதல்ல. எனவே மிகச்சிறந்த முறையில் ஆற்றுகைகளை மேடையேற்றுவதன் மூலமாகத் தற்கால இளைஞர்களைக் கூத்து ஆர்வலர்களாக மாற்ற முயற்சிக்கலாம். எமது பங்குத் தந்தையர்களும் முயற்சி எடுத்து கூத்துக்களைப் பங்குகளில் போடுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும். ●

## பரிந்துரை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

➢ பேதுரு சிறைவைக்கப்பட்டிருந்தபோது, அவரது சீடர்களும் மக்களும் அவருக்காக இறைவனிடம் உருக்கமாக பரிந்துரைகளை ஏறெடுத்தனர். அதன் விளைவு? அற்புதமான முறையில் விலங்குகள் ஒழிந்து, சிறைக் கதவுகள் திறந்து, அவர் எவ்வித ஆபத்துமின்றி இறைவனால் விடுவிக்கப்படுகிறார். இங்கும் பேதுருமீது மக்கள் கொண்டிருந்த இணையில்லா அன்பும், இறைவன் விடுவிப்பார் என்ற உறுதியான நம்பிக்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளதை நாம் பார்க்கிறோம்.

எனவே, 1திமொ 2:1 ல் குறிப்பிடப்படுவது போல "அனைவருக்காகவும் மன்றாடுங்கள் இறைவனிடம் வேண்டுங்கள் பரிந்து பேசுங்கள் நன்றி செலுத்துங்கள். முதன் முதலில் நான் உங்களுக்குத் தரும் அறிவுரை இதுவே".




# திருமண வாழ்வின் பொன்விழா வாழ்த்து

## திரு திருமதி. மரியநாயகம் அன்ரன் யோசவ் மரியஸ்ரெலா மதுரம்

ஊர்காவற்துறை நாரந்தனையில் பிறந்து யாழ். திருக்குடும்ப கன்னியர்மடத்தில் ஆரம்பக் கல்வியையும் யாழ். பத்திரிசியார் கல்லூரியிலும், நாரந்தனை ஆண்கள் பாடசாலையிலும் கல்வி கற்று, இல. 95. வட்டக்கச்சியிலுள்ள இல்லத்தில் வாழ்ந்து கிளி/புனித திரேசா கல்லூரியில் கற்கைகளை நிறைவு செய்து, கொழும்பு அரச நுண்கலைக் கல்லூரியில் சித்திரமும், வர்ணமும், ஸ்ரான்லி அபயசிங்கா, மொறிஸ் பெரேரா, விஜயசேகரா போன்ற புகழ்பெற்ற கலைஞர்களிடம் 3 வருடங்கள் பயிற்சிபெற்று சித்திராசிரியர் தராதரப் பத்திரம் பெற்று கைதடி செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையில் சித்திர சிற்ப ஆசிரியராக 12 வருடங்கள் பணியாற்றிய காலப்பகுதியில் பலாலி ஆசிரிய கலாசாலையில் கல்விகற்று, கவின்கலை சித்திரப் பயிற்சியை நிறைவு செய்து, இக் காலப் பகுதியில் 18/B கோவில் வீதியில் துணைவியைத் திருமணம் செய்து, புனித மரியன்னை பேராலய முன்னாள் சக்கிறிஸ்ரியின் மகள் – மருமகன். கிளி/புனித திரேசா கல்லூரியிலும் திருவையாறு ம.வியிலும், வட்டக்கச்சி ம.வியிலும் சித்திராசிரியராகப் பணியாற்றி கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் ஆசிரிய ஆலோசகராகவும், தொலைக்கல்வி போதனாசிரியராகவும், எல்லாமாக 34 வருடங்கள் பணியின் மூலமாக சித்திர சிற்பக் கலைஞர்களை உருவாக்கியும், புலோலியில் கந்தமுருகேசனார் சதா அவதானி நா.கதிரைவேற்பிள்ளை இருக்கின்ற சிலைகளும், இருதய ஆண்டவர், இறை இரக்கத்தின் இயேசு, அன்னை திரேசா, வரவேற்பு மாதா, மாதாவின் மடியில் உயிர்விட்ட இயேசு, காவற் சம்மனசு, பற்றிமா மாதா போன்ற சிலைகள் மூலமாக கலாபூஷண விருது, கலைக்குரிசில் விருது, யாழ். ரத்தினா விருது, யாழ். ஓசை விருது, முதலமைச்சர் விருது என்பவற்றைப் பெற்றவராகவும், 34 வருட சேவைக்கு ஓய்வூதியம் பெற்றுக் கொண்டவராக, திருமண வாழ்வின் 50 வருட பொன்விழா கண்டுள்ளார். இறைவனுக்கு நன்றி.

188 , கோயில் வீதி,
யாழ்ப்பாணம். 0778995778

AD- 18

Mr.Judenorled Francis (CEO of JC's Group of Companie
Mr. Joe Kumar Francis (Owner of Seet Joe Cakes)
சகோதரர், உறவினர்கள், நண்கர்கள்

# இல்லற வாழ்வின் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து

## திரு.திருமதி. பவுலீன் அருள்மலர் (ராசமணி – சறோ)




நவாலியைச் சேர்ந்த பவுலீன் அருள்மலர்
கடந்த 11.02.2022 அன்று
நவாலி புனித பேதுருவானவர்
ஆலயத்தில்திருமணப் பொன்விழாவைக்
கொண்டாடினர். ஞானப்பிள்ளையாகிய
அருட்பணி அருட்செல்வன் அடிகளார்
நன்றிப் பலியை ஒப்புக்கொடுத்தார்.
இவர்கள் உடல் உள நலத்துடன் வாழ
இவர்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

Ad. 19

குடும்பத்தினர்
சகோதரர்கள்



கடந்த 12.02.2022 சனிக்கிழமை கிளிநொச்சி மறைக்கோட்டப் பொதுநிலையினர் கழகக் கூட்டம் கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில் மறைக்கோட்டக் கழக இயக்குநர் அருட்பணி செபஜீபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டதோடு, கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி யேசுதாஸ் மற்றும் மறை மாவட்டக் கழக உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.



கடந்த 22.01.2022 அன்று தீவக மறைக்கோட்டப் பொது நிலையினர் கழகக் கூட்டம் கழக இயக்குநர் அருட்பணி S.J.Q.ஜெயரஞ்சன் அவர்கள் தலைமையில் சின்னமடு ஆலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டதோடு, யாழ் மறைமாவட்டக் கழக இயக்குநர் அருட்பணி J.J.மவுலிஸ் அவர்களும், வளவாளர் இ.அ.அமலரட்ணம் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கியிருந்தனர்.



கடந்த 06.02.2022 ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மறைக்கோட்ட பொதுநிலையினர் கழகக்கூட்டம் கழக இயக்குநர் அருட்பணி A.P.அன்ரனிப்பிள்ளை அவர்களின் ஒழுங்குபடுத்தலில் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டதோடு, யாழ். மறைமாவட்டக் கழக இயக்குநர் அருட்பணி J.J.மவுலிஸ் அவர்களும், வளவாளர் இ.அ.அமலரட்ணம் அவர்களும் கலந்து சிறப்புரை வழங்கினர்.

# 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15.05.1936



விண்ணில்
19.02.2021

குருவாக :- 01.09.1962

## அருட்பணி G.E. மேரி யோசவ்

"ஆண்டவரின் ஆசியே இறைப்பற்றுள்ளோருக்கு கிடைக்கும் பரிசு (சீ.ஞா.11:22)

எம் வாழ்வின் அடித்தளமாக இருந்தவரே
அன்புத் தந்தையே எம் வாழ்வுக்கு வழிகாட்டிய தெய்வமே
உமக்கு ஒருபோதும் மரணம் என்பது இல்லை
ஏனெனில் நீர் எம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்
இறைவனில் ஆன்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

100/2 மவுண்கார்மேல் வீதி
யாழ்ப்பாணம்

E.அலோசியஸ்
குடும்பத்தினர்

# 5ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணகம் 07.08.1946
விண்ணகம் 28.02.2017

அமரர்

## யோசவ் அலோசியஸ் நவரட்ணம்

உலக வாழ்வை விட்டுப் பிரிந்து ஐந்து
ஆண்டானாலும் எம் நினைவுகளில் என்றும்
வாழ்ந்து கொண்டிருக்கின்றீர். எம்
வாழ்நாளெல்லாம் எம்முடன் இணைந்து
இருப்பீர் என நம்பிக்கை கொள்கிறோம். உம்
ஆன்மா இறைவனடியில் சங்கமித்து சாந்தி
பெற்றிட வல்ல தேவனை நித்தம்
வேண்டிடுவோம்.

AD-17

குடும்பத்தினர்

# பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத
நிலையை நான் அடைய வழி காட்டும்
பரிசுத்த ஆவியே, உமது திருநாமம்
அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடை
களின் மூலம் என் உள்ளத்தைப்
பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்
தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே,
என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும்
எனக்கு உற்றதுணையான உமக்கு
இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும்
சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.
என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக
இருப்பினும் எக் காரணம் கொண்டும்
உம்மிலிருந்து விலகாமல்
என்றும் நிலைத்திருப்பேனென
உறுதி கூறுகின்றேன்.
நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும்
என்றென்றும் உமது முடிவில்லா
மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச் செபத்தைப் பிரிசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்)

(AD- 21 )

ஓர் அடியாள்.

## இளையோருக்கான ஊடகப் பயிற்சிப்பட்டறை



வன்னி கியுடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான ஊடக நிகழ்ச்சித் தயாரிப்பு தொடர்பான கருத்தரங்கு 6ம் திகதி கடந்த ஞாயிற்றுக்கிழமை மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தில் நடை பெற்றது. மறைநதி ஊடக மைய இயக்குநர் அருட்திரு அன்ரன் ஸ்ரீபன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தமர்வில் படப்பிடிப்பு, படத்தொகுப்பு, தொடர்பான பயிற்சிகளுடன் பங்கேற்பாளர்களினால் நேர்காணல் நிகழ்வு ஒன்றும் தயாரிக்கப்பட்டு YouTube சமூக வலைத்தள ஊடகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

## பத்திரிசியார் கல்லூரியில் யாழ் ரெனிஸ் தினம்



யாழ் ரெனிஸ் வலைப்பந்துக் கழகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட ரெனிஸ் தினம் 29ஆம் திகதி கடந்த சனிக்கிழமை யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

யாழ் ரெனிஸ் கழகத் தலைவர் அருட்திரு A. P. திருமகன் அடிகள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ராஜீலன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள 20 பாடசாலைகளில் இருந்து தற்போது ரெனிஸ் பயிலும், புதிதாக ரெனிஸ் பயில விரும்பும் 10 வயதுக்குட்பட்ட 200 மாணவர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர்.

## முழங்காவில் மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறை



முழங்காவில் பங்கிலுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கான பாசறையும், மறை ஆசிரியர்களுக்கான பாட ஆயத்தங்கள், கற்பித்தல் தொடர்பான கருத்தமர்வும் 5ஆம் திகதி கடந்த சனிக்கிழமை இரணை மாதா ஆலயத்தில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்திரு ம. பத்திநாதர் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்திரு X. W. ஜேம்ஸ் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 320 மாணவர்களும் 30 மறைஆசிரியர்களும் இணைந்து பயன்பெற்றனர்.

## தமிழ் மறைமாவட்டங்களின் மறையாசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சிக்கான திட்டமிடல்



வடக்குக் கிழக்கு ஆயர்கள் மன்றத்தின் ஏற்பாட்டில் நான்கு தமிழ் மறைமாவட்டங்களையும் இணைத்து மறையாசிரியர்களுக்கான ஒரு மாத வதிவிடப் பயிற்சியை மடுத்திருத்தலத்தில் எதிர்வரும் யூலை மாதம் 03ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 03ம் திகதி வரை நடாத்துவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இவ்வதிவிடப்பயிற்சிக்கான திட்டமிடல் கலந்துரையாடல் நான்கு மறைமாவட்டங்களின் மறைக்கல்வி இயக்குநர்களை உள்ளடக்கி, மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் கடந்த 10ம் திகதி வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.

## திருக்குடும்பக் கன்னியர்மட முன்பள்ளி மாணவர்களின் சந்தை



யாழ். திருக்குடும்ப கன்னியர்மட முன்பள்ளி மாணவர்களினால் நடாத்தப்பட்ட சந்தை நிகழ்வு 09ம் திகதி கடந்த புதன்கிழமை அங்கு நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ் கியுடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்திரு இயூஜின் பிரான்சிஸ் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். முன்பள்ளிப் பொறுப்பாசிரியர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் ஒத்துழைப்போடு முன்னெடுக்கப்பட்ட இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இணைந்து கொண்ட அருட்திரு இயூஜின் அடிகளினால் இம் முன்பள்ளிக்கு வீட்டுத் தோட்டத்திற்கான சில உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

## தர்மபுரத்தில் 100 மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்கள்



தர்மபுரம், பெரியகுளம், பிரமந்தநாறு உழவனூர் பிரதேசங்களில் தெரிவு செய்யப்பட்ட நூறு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு 01ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்திரு நிக்சன் கொலின்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்புத்துறை புனித சவேரியார் குருமடத்தில் உருவாக்குனராகப் பணியாற்றிவரும் அருட்திரு தே. ரவிராஜ் அடிகளும் சமூக ஆர்வலர் செல்வன் திவ்வியன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இதற்கான நிதி அனுசரணையை அவுஸ்ரேலியாவில் வாழ்ந்துவரும் அன்பர் ஒருவர் வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இரணைதீவு – சின்னத்தீவு புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா



கடந்த தை மாதம் 28,29 சனி, ஞாயிறு ஆகிய தினங்களின் இரணைதீவில் உள்ள சின்னத்தீவு புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா சிறப்பாக இடம்பெற்றது. நற்கருணைத் தினமும், திருவிழாத் திருப்பலியும் அருட்தந்தை யேசுபாலன் அ.ம.தி. அடிகளால் வழிநடத்தப்பட்டது. 500 இற்கும் அதிகமான இறைமக்கள் கலந்து கொண்ட இத்திருவிழாவின் அனைத்து ஒழுங்குகளையும் பங்குத் தந்தை அருட்பணி ம. பத்திநாதர் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.

## சுன்னாகத்தில் திருப்பாலத்துவ சபைத் தினம்



சுன்னாகப் பங்கிலுள்ள அனைத்து ஆலயங்களைச் சேர்ந்த திருப்பாலத்துவ சபைச் சிறார்கள் ஒன்றிணைந்து தம் திருநாளைக் கடந்த 13.02.2022 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடினர். இவ்விழாத்திருப் பலியை திருப்பாலத்துவ சபையின் மறைமாவட்ட இயக்குநர் அருட்பணி எஸ். ஏ. றொஷான் அடிகளார் ஒப்புக் கொடுத்தார். இந் நாள் நிகழ்வுகள் பங்குத்தந்தை அருட்பணி ஜெறாட் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.

## நல்லிணக்கபுரத்தில் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டல்



நல்லிணக்கபுரம் மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் 2017 ஆம் ஆண்டு "நல்லிணக்கபுரம்" என்ற மீள்குடியேற்றக் கிராமத்தில் குடியேற்றப்பட்ட 53 குடும்பங்களுக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் ஓர் ஆலயம் உருவாகின்றது.

மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்திரு S. நேசநாயகம் அடிகளாரால் 15.02.2022 அன்று புனித அமைதியின் அரசி ஆலயத்திற்கான அத்திவாரக் கல் ஆசீர்வதிக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2022ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.